# புகழ்பூத்த புலவர்மணி

## கவிதைத்தொகுதி



புலவர்மணி
பெரியதம்பிப்பிள்ளை
நினைவுப் பணிமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Acc No 1357

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்பூத்த

# புலவர்மணி

## கவிதைத்தொகுதி

இனிய அன்பளிப்பு.
புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை
நினைவுப் பணி மன்றம்
இல. 42/1, வன்னியா வீதி,
மட்டக்களப்பு.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Class No:
Acc No 1357

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

நினைவுப் பணிமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | புகழ்பூத்த புலவர்மணி |
| வகை | : | கவிதைத்தொகுதி |
| தொகுப்பாசிரியர் | : | கலாநிதி சி. சந்திரசேகரம் |
| பதிப்புரிமை | : | © 2018 புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணிமன்றம் |
| வெளியீடு | : | புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணிமன்றம் |
| பக்கங்கள் | : | 113 |
| அச்சு | : | வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு |
| விலை | : | 400.00 |
| ISBN | : | 978-955-3453-00-6 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

புலவர்மணி மறைந்தாலும் அவருடைய புகழ் இன்றும் வீசிக் கொண்டிருக்கின்றது. இதற்குச் சான்றாக அவரது படைப்புக்கள் விளங்குகின்றன. அவர் வாழ்ந்த காலப்பகுதியில் அவர் தமிழுக்கும், சைவத்திற்கும் ஆற்றிய தொண்டுகளும் சேவைகளும் இன்றும் நிலைத்திருப்பதை நாம் காண்கின்றோம். அந்த வகையில் அவரின் நினைவாக ஓர் நினைவுப் பணிமன்றம் நிறுவப்பட்டு வருடம் தோறும் அவரது உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதோடு அதனைத் தொடர்ந்து சிரார்த்த தின விழாவினையும் ஏற்பாடு செய்து, சிரார்த்த தின உரை, கவி அரங்குகள், கவிதைப் போட்டிகள் முதலியனவும் இடம் பெற்று வருகின்றன.

புலவர்மணி அமரத்துவம் அடைந்த பொழுது அவரின் மறைவை ஒட்டிப் பல கவிஞர்களால் அஞ்சலிக் கவிதைகள் பாடப்பட்டன. அத்தோடு கவி அரங்குகளில் பாடப்பட்ட கவிதைகளும், கவிதைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட கவிதைகளும், தனிப் பாடல்களும், புலவர்மணியின் சிறப்புகளைச் சித்திரிப்பனவாய் விளங்குகின்றன. அக்கவிதைகளை தேடி எடுத்து 'புகழ்பூத்த புலவர்மணி' என்கின்ற தலைப்பிலே ஒரு கவிதை நூலினை நினைவுப் பணிமன்றம் வெளியிடுகிறது.

இந்நூலில் இடம்பெறும் கவிதைகளைப் பாடிய கவிஞர்கள் சிலர் அமரத்துவம் அடைந்து விட்டார்கள். சிலர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்தவகையில் புலவர்மணி பற்றிய சிறப்புகளை கவிதையாக சொரிந்த அனைத்துக் கவிஞர்களுக்கும் புலவர்மணி நினைவுப் பணி மன்றத்தின் சார்பாக நன்றிகளை கூறிக் கொள்வதோடு இருக்கின்ற கவிஞர்கள் தங்களது கவிதைப் படைப்புகளை வெளிக்கொணர வேண்டும் என்ற ஆசிச் செய்தியையும் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்க கவிஞர்கள் வளர்க தமிழ்மொழி. நன்றி.

**பெ. சத்தியலிங்கம்**
செயலாளர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை
நினைவுப் பணிமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மூத்த தலைமுறை சார்ந்த ஆளுமைகள் மீது பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கவிதைகள் பாடப்படுகின்ற மரபு எம்மிடம் உள்ளது. எனினும் அவற்றைத் தொகுத்து நூலுரு வாக்கும் மரபு எம்மிடமில்லை. ஆறுமுக நாவலர் பற்றிய கவிதைகள் அவ்வாறு தொடுக்கப்பட்டு வந்த பின்னர் புலவர்மணி பற்றிய இத் தொகுப்பே வருகின்றது; கிழக்கில் வரும் முதற் தொகுப்பும் இதுவே ஆகின்றது!

மேற்குறிப்பிட்ட வகை சார்ந்த - மரபு சார்ந்த - கவிதைகள் பலவும் பாராட்டுரைகளாக அமைவதே வழக்கமாகும். தமிழ்ச் சமூக மரபும் அவ்வாறு பாடுவோர் நோக்கும் கவிதையின் ஆக்கமுறைமையும் கவிஞர்கள் விரும்பினாலென்ன விரும்பா விட்டாலென்ன அத்தகைய போக்குடைய கவிதைகள் எழுவதற்கே வழி வகுத்துள்ளது!

புலவர்மணி பற்றிய கவிதைகள் கொண்ட இத்தொகுப்பிலும் அத்தகு போக்கு இருப்பினும் அதையும் மீறி அவற்றிடையே முக்கியமான விடயங்கள், சிறப்புக்கள் முதலியன பற்றி அறியத்தருகின்ற கவிதைகள் பலவுள்ளமை குறிப்பிடத்தக்கது!

'புலவர்மணி' கவிஞர் மு.சடாட்சரன் குறிப்பிட்டுள்ளதுபோன்று கிழக்கின் ஒழிவிளக்காக விருப்பினும் இன மத பிரதேச வேறுபாடின்றி அனைவராலும் போற்றப்படுவது அன்னாரது சமூக இருப்பையும் அத்தகைய சமூக இருப்பு நிச்சயமென்பதையும் உணர்த்துகின்றன !

இத்தொகுப்பிலே பாராட்டுரைகள் தவிர புலவர்மணியின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கின்ற கவிதைப்பகுதிகளுள்ளன. அன்னாரது கவிதை நூல்களின் சிறப்பு, முக்கியத்துவம் பற்றி எடுத்துரைப்பனவுமுள்ளன

கவியரங்கத்திறனை வெளிப்படுத்தும் கவிதைகள் உள்ளன. அந்த நிகழ்ச்சிகளின்போது புலவர்மணியின் புலமைத்திறனை வெளிப்படுத்தும் அம்சங்கள் சிலவற்றை எடுத்துக்காட்டும் கவிதைப் பகுதிகளுமுள்ளன.

சமகால கவிஞர்கள் பற்றியும் சமகாலக் கவிதைச் செவ்நெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும் அறிவதற்கான வாய்ப்பினையும் இத்தொகுப்பு வழங்கியுள்ளது. மேற்கூறியவற்றினை தேடி வாசிப்பது வாசகர்களின் பொறுப்பாகும்.

புலவர்மணி பற்றிய பாராட்டுக் கட்டுரைகள் கொண்ட தொகுப்பு ஏற்கனவே வெளிவந்துள்ளது. இப்போது கவிதைத் தொகுப்பு வருகின்றது. இன்னும் வெளிவருவதற்கும் சிலவுள்ளன. குறிப்பாக அன்னார் பொறுப்பேற்று நடத்திய 'கிழக்குத் தபால்' இதழ்களைத் தேடி வெளியிட வேண்டிய இன்றியமையாத தேவை உள்ளது. முக்கியமான இத் தொகுப்புடன் தொடர்புபட்டுள்ள ஆர்வலர்கள் அவற்றையும் தேடி வெளியிடுவார்கள் என்பதில் ஐயமில்லை!

வாழ்த்துக்களுடன்
**கலாநிதி. செ. யோகராசா**
(ஓய்வுநிலைப் பேராசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தமிழுக்குத் தொண்டாற்றிய பெருமக்கள் பற்றி அவர்களது காலத்திலும், அவர்களது மறைவின் போதும் பின்னும் ஏனைய புலமையாளர்கள் முக்கியமாகக் கவிதை வடிவத்திலே தமது உணர்வுகளையும் பெருமைகளையும் பாடுவதும் அது ஒரு சடங்காக அத்துடன் முடிந்து போவதும் எமது சமூக மரபாக இருந்து வருகின்றது. அவற்றை வெறும் புகழாரங்களாகவே நாம் கருதி வந்திருக்கின்றோம்.

இந்நிலையில் புலவர்மணி பற்றி சமகாலப் புலவர்களும் பின்வந்தோரும் அவ்வப்போது எழுதிய கவிதைகளைப் படித்தபோது புகழ்ச்சி என்பதையும் தாண்டி புலவர்மணியை எமது வருங்காலச் சந்ததியினருக்கு வலுவாக அடையாளப்படுத்தும் ஆவணங்கள் என்றவகையில் அவை அமைந்திருந்தமையை உணர முடிந்தது. முக்கியமாக பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவதைப்போல் 'புலவர்மணி வாழ்ந்த காலத்தும் அதற்குப் பின்னும் கிழக்கிலங்கையின் தமிழ்ப் புலமையின் சின்னமாகப் போற்றப்பட்டவர்' என்பதை அவை அடையாளப்படுத்தி நின்றன. எனவே இவற்றைத் தொகுப்பது ஒரு சமூகக் கடமை என்பதை உணர்ந்தோம்.

இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் பெரும்பாலானவற்றைப் பாதுகாத்து வைத்திருந்தவர் புலவர்மணியின் புதல்வர் பெ.சத்தியலிங்கம் ஐயா அவர்கள். இத்தொகுப்பைத் தொகுப்பதற்கு மூலமாக இருந்தவரும் அவரே. இத்தொகுதியில் உள்ள கவிதைகள் பெரும்பாலும் கால அடிப்படையிலே தொகுக்கப்பட்டுள்ளன. சில கவிதைகளின் ஆண்டு விபரங்களை அறிய முடியாது போய்விட்டன. இதனால் சில இடங்களில் கால வரிசையில் சில முரண்கள் ஏற்படலாம். ஆயினும் இக்கவிதைகளின் பொருளை அடிப்படையாகக் கொண்டு கால ஒழுங்கை நிர்ணயம் செய்து புலவர்மணி இறப்பதற்கு முற்பட்டவை, இறந்தபோது பாடப்பட்ட இரங்கற் செய்யுட்கள், பிற்பட அவரின் நினைவாக குறிப்பாக நிகழ்வுகள், விழாக்களில் பாடப்பட்டவை என்ற அடிப்படையில் ஒழுங்குமுறை பின்பற்றப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக இக்கவிதைத் தொகுப்பை வெளியிடுவதில் முன்னின்று உழைத்த பெ.சத்தியலிங்கம் ஐயா அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்வதோடு தொகுப்புக்குரிய கவிதைகளைத் தந்துதவியவர் களுக்கும் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்புகளை வழங்கிய நினைவுப் பணிமன்ற உறுப்பினர்களுக்கும் நேர்த்தியாக அச்சிட்டும், அட்டையை அழகுற வடிவமைத்தும் வழங்கிய வனசிங்கா அச்சகத்தாருக்கு குறிப்பாக சங்கர் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

**கலாநிதி சி. சந்திரசேகரம்,**

தலைவர்,

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

நினைவுப் பணிமன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| » | பண்டூரு முகிற்குலங்கள்... | 1 |
| » | வெண்பா | 1 |
| » | வரவேற்பு உபசாரப்பா | 2 |
| » | புலவர் மணிக்கீதங்கள் | 3 |
| » | ஒளி வீசும் மணிவிளக்கு | 5 |
| » | புலவர்மணி பெரியதம்பி | 6 |
| » | வெண்பா | 8 |
| » | இரங்கற் செய்யுள்கள் | 9 |
| » | வள்ளல் தமிழ் வாரிதியே கிழக்கின் ஒளி விளக்கே! | 11 |
| » | ஒளி தந்த புலவர்மணி | 12 |
| » | இரங்கற் பா | 13 |
| » | மட்டுநகர் மாதா பொலிவிழந்தாள் | 15 |
| » | மாகவிதை மன்னர்! | 16 |
| » | தனிச்சிறப்புப் பெரியதம்பிப்பிள்ளை | 17 |
| » | புலவர்மணி பிரிவு | 19 |
| » | மட்டுநகர் தந்தமணி | 21 |
| » | புலவர்மணி புகழ் | 24 |
| » | தமிழுலகம் போற்றும் செம்மல் | 30 |
| » | வெண்பாவிற் புலியெங்கள் புலவர்மணி | 33 |
| » | நினைவஞ்சலிப்பா மலர் | 35 |
| » | புலவர்மணி | 37 |
| » | புலவர்மணி கவிதாஞ்சலி | 40 |
| » | புலவர்மணி | 41 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| » | நினைவஞ்சலிப்பா மலர் | 47 |
| » | நினைவஞ்சலிப்பா மலர் | 52 |
| » | புலவர்மணி | 56 |
| » | மட்டுநகர் தந்த மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை | 60 |
| » | புலவர்மணி என்றோர் புயல் | 63 |
| » | புலவர்மணி என்றோர் புயல் | 66 |
| » | புலவர்மணி என்றோர் புயல் | 69 |
| » | புலவ(ர்)மணி வெண்பா | 71 |
| » | புலவர்மணி என்றோர் புயல் | 74 |
| » | தமிழ் தந்த புவலர்மணி | 76 |
| » | தமிழ் தந்த புலவர்மணி | 80 |
| » | தமிழ் தந்த புலவர்மணி | 87 |
| » | தமிழ் தந்த புலவர்மணி | 92 |
| » | புலவர்மணி (ஏ. பெரியதம்பிப்பிள்ளை) | 96 |
| » | மறைந்தும் மறையாத புலவர்மணி வாழ்க! | 97 |
| » | புலவர்மணி புகழ் பாவஞ்சலி | 98 |
| » | சில எண்ணங்கள் | 100 |
| » | புலவர்மணி ஒரு பா ஒரு பஃது | 103 |
| » | பண்டிதர் ஐயா உன் பாதம் போற்றி | 105 |
| » | புகழ் பூத்த புலவர்மணி | 108 |
| » | புலவர்மணி புகழ் வாழ்க. | 111 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டூரு முகிற்குலங்கள்...

**- சுவாமி விபுலாநந்தர் -**

பண்டூரு முகிற்குலங்கள் எமதிறைவர்
மருகர் திருப் பதியீதென்ன
விண்டூர மழைபொழியும் சிறப்பதனால்
வளம் மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரிலு றைமுருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மரபிற்சொற்றான்
கண்டூரு மினியமொழிப் பெரியதம்பிப்
பிள்ளையெனும் கலைவல்லோனே.

# வெண்பா

**- பண்டிதர் இரத்தினமுனிவர் ஐயர் -**

செஞ் சொல்லும் செம் பொருளும் சேர்ந்து
மிளிர்வடைய மிஞ்சுமிசை வீறு கொள வெண்பாவால் தஞ்சமென
நற்பகவத் கீதை நவின் றிட்டான் ஆரமிர்தாய்ச்
சொற் பெரிய தம்பி யெனச் சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்பு உபசாரப்பா

**- சைவமாமணி வி. விசுவலிங்கம்**

சீரும் திருவும் திகழ் மண்டூர்ச்
செல்வேள் அருளின் செழும்பேறே
ஊரும் உலகும் பயனடையும்
ஓங்கு தமிழுக் கொருநிதியே
பேரும் புகழும் நிலவுமுயர்
பெரிய தம்பிப் பிள்ளைஎன
ஆரும் போற்றும் புலவர்மணி
ஐயா வருக! வருகவே!

தேனார் மட்டு வளநாடு
சிறக்குந் திருவே சித்தாந்த
ஞான பானு எனமிளிரும்
நல்லோய் நல்லூர் நாவலவன்
மாணார் புகழ்சேர் மாணவரின்
மரபை விளக்கும் மாமணியே
ஆனா அறிவுக் குறைபதியே
அன்பே வருக! வருகவே!

கன்னைப் பதிசேர் ஆசானாய்த்
துலங்கு குமார சுவாமிஎன
மன்னு தமிழ்ப்பே ராழியினில்
மகிழ்ந்து படிந்த மாமுகிலே
பின்னைப் புலவர் வெண்பாவில்
பெரிய தம்பி எனப்போற்ற
வன்னத் தமிழிற் கீதையினை
மலர்ந்த மதுர கவிவருக!

தெருளார் உள்ளச் செழுமலரில்
சிவஞா னத்தேன் சுரந்தூட்டி
மருளார் மாயா மலந்துடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசில் சைவ மாமணியே,
அருளார் விபுலா நந்தரடி
அகத்தே நிறுத்த அன்பினிலே
பொருளார் மீட்சிப் பத்துரைத்த
புலவர் ஏறே வருகவே!

ஆசில் மண்டூர்ப் பதிகமெனும்
அருநூ லியற்றி அறுமுகவன்
வீசுங் கருணை வெள்ளத்துள்
மேய குருவே விளங்குமுயர்
தேசு மலியு மிலங்கைமணித்
திருநா டென்னுங் கவிமூலம்
தேச ஒருமைப் பாடுரைத்த
திறலோய் வருக! வருகவே!!

எண்ணில் அமையாச் சொற்பொழிவால்
எழுத்தாற் கவிதை இன்பொருளால்
மண்ணில் வாழ வழிகாட்டும்
மாசில் மணியே மகிழ்ந்து நிதம்
நண்ணும் யார்க்குந் தமிழமிழ்தை
நல்கி அறிவுப் பசிதணிக்கும்
தன்னே ரில்லாப் புலவர்பெருந்
தகையே வருக! வருகவே!!

கலையின் பெருக்கே கற்பகமே
கவிதைக் கடலே களித்து நிதம்
பலரும் புகழ்பா வலரேறே
பண்பில் உயர்பண் டிதமணியே
நிலையில் திரியா நெடுவரைமேல்
நிலவுஞ் சுடர்போல் நீடுழி
அலகில் பணிகள் தமிழன்னைக்
காற்ற இறைவன் அருள்கவே.

கல்முனை சைவ மகா சபை ஆண்டு விழாவின் போது உயர்திரு. புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் சேவையை பாராட்டி, குறித்த சைவ மகா சபையினர் அன்னாருக்கு வழங்கியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் மணிக்கீதங்கள்

**- மகாவித்துவான் வி.சீ. கந்தையா -**

1. மண்டூரில் உறை முருகன் திருவருளால்
வந்தவெனக் குரிய வொரு காலந்தேர்ந்து
மயலறுத்தே உயர்ந்த தமிழ் இலக்கணமும்
இலக்கியமும் உரை நடையும் ஒளிர வைத்தோன்.

2. பண்டிதருட் பாவலனாய் பல கலையும்
திருவருளும் உள நிறைவும் பயின்று தமிழ்ப்
பண்பாட்டிற் புலவர்மணி பெரியதம்பிப்
பிள்ளை எனப் பலர் புகழ மொருவனாகிச்

3. கொண்டாடும் தகைமையினோன் மட்டுநகர்த்
தமிழ் விளக்காய் ஈழமெங்கும் ஒளிரும் சோதி
தமிழ் மணமும் சிவ மணமும் கமழ் மண்டூர்த்
தவப் புதல்வன் கீதை வெண்பா நிதியமீந்தோன்.

4. பண்தோயும் செந்தமிழ்வேல் முருகனுக்குப்
பதிகமென அருள் குழைத்த கவி படைத்தான்
பதித்தனை வெளியிடற்கு யாளிழைத்த
தவப் பேற்றை ஒரு நாவற் கரலலாமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி வீசும் மணிவிளக்கு

- ஜீவா ஜீவரத்தினம் -

வெண்கலத்தைத் தட்டிவிட்டால் மேலெழும்பும் ஒலியை
மேவிநிற்கும் காம்பீர்ய மானகுரலாலே
தண்பொதிகை மடியினிலே தவழ்ந்ததமிழ் அள்ளித்
தந்துநின்ற திருவாயும், தாட்சண்ய மனதும்,
கண்களிலே சுடரொளியும், கண்ணாடி அழகும்,
கவர்கின்ற புன்னகையும், கபடமிலா நோக்கும்,
புண்படா துரையாடும் போற்றரிய பண்பும்
புலவர்மணி ஐயாவின் பொன்னணிகள் ஆகும்!

வித்தகராம் சுவாமிவிபு லானந்த ருக்கோர்
மேன்மையுறு மாணவனாய் விளக்கிட்ட மேலோன்,
பெத்தலையில் பிறந்தபிரான் வழிதொடர எண்ணிப்
பிரியமுடன் தமிழநாடு சென்று, மனம் மாறிச்
சுத்தமெய்ச் சைவஒளி தொடர்ந்து, வழி மீட்க,
துரிதமாய்த் தன்பதியை வந்தடைந்த பின்னர்
சித்தாந்த, வேதாந்த திருமறைக ளோடு
செந்தமிழில் சிறப்புற்றார் புலவர்மணி ஐயா!

உள்ளதையும் நல்லதையும் ஒளிவுமறை வின்றி
உரைத்ததையும், ஸ்ரீ கிருஷ்ண பகவானின் கீதை
வெள்ளத்துள் அடிமூழ்கி உள்ளாய்ந்து கண்ட
மேலான தத்துவத்தை - விழுப்பொருளை அள்ளித்
தெள்ளுதமிழ் வெண்பாவில் சீரியநன் னடையில்
தெரியாரும் புரிவகையில், திரிபுபடா யாப்பில்
அள்ளிவழங் கிட்டதையும் அறியாதார் யாரோ?
அறியாதார் உளராயின் அவரெந்த ஊரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி பெரியதம்பி

- பண்டிதர் இணுவையூர் கா.செ.நடராசா

மட்டு நகர்தந்த
மட்டுப்படாத் தமிழனவன்
தொட்ட இடமெல்லாம்
மட்டுச் சுவைதந்தான்
மெட்டுப் பலகண்டே
என்றும் நயந்திடவே.

மட்டுப்படா இன்பம்
சந்தச் சுவையோடு
கொட்டிக் குவிந்திடவே
புலவர்மணி பெரியதம்பி
இட்டுவைத்தான் செந்தமிழில்
நன்று மகிழ்ந்திடவே

புகழ்பூத்த வாழ்வு கொண்டோன்
அழகூட்டும் தமிழ்ப்பாவால்
குலம்கொண்ட புகழ் ஓங்க
தண்டமிழ் மணியாகி
நலம் கொண்ட உணர்வோடு
செந்தமிழால் நலஞ்செய்தான்

செந்தமிழால் நலஞ்செய்தான்
செந்நெறி வாழ்வு கொண்டான்
விண்டுரைத்த சொல்லெல்லாம்
மட்டின்சுவை தந்தம்மா
மொண்டு மகிழ்ந்திட்டேன்
வாழ்க அவன்புகழே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுநெறி தவறாதான்
பெரியதம்பிப் பாவலன்காண்
புதுமையெனப் பேர்சொல்லிப்
பயனறியாச் சொற்புகலான்
கவியென்று சொல்லி நிதம்
கவியாக வாழ்ந்ததில்லை.

புவியெல்லாம் புகழ்மணக்கத்
தணியாத பணி செய்தோன்
கவியாக வாழாத புலவனவன்
சலியாத உழைப்பதனால்
நிலையான வாழ்வுற்றோன்
புலவர் மணிப் பெரியோனே

புலவர்மணிப் பெரியோனைப்
பெரியதம்பிப் பாவலனத்
தமிழ் உணர்ந்தார் உள்ளத்தால்
உவந்து நிதம் போற்றிடுவார்
தரமறியார் உணர்வதில்லைத்
தண்டமிழின் சுவை அதனை

மட்டுறும் நாட்டகத்து
மட்டார் குழல் குலுங்கச்
சாட்டுறும் தமிழாலே
பாடி மகிழ்ந்தவனே
நூற்றாண்டு பலகாணப்
புகழ்பூத்து வாழ்ந்திடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுநெறி வந்தவனாய்த்
தண்டமிழின் சுவை உணர்ந்து
இணையிலியாய் வாழ்வுற்றோன்
தில்லைக்கூத்தன் இவன்
நடராசன் என்றுரைக்கும்
செந்நாப் புலவன்நான்.

செந்நாப் புலவன்நான்
சொன்னதமிழ் பொய்த்ததில்லை
தன் ஆண்மை கொண்டவனே
தண்டமிழ் உணர்ந்திடுவான்
சங்கத் தமிழறிந்த
மரபுடையார் தாமறிவார்.

## வெண்பா

### பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

(I)

கந்தசட்டி நன்னாள் கருணைத் திருமுருகன்
பந்தமறுத் தாண்டருளும் பக்குவநாள் - செந்தமிழில்
வல்ல புலவ வருக வருகவெனச்
சொல்லும் தமிழ் முருகன் தூது

-1978

### வேறு

(II)

சீதை கவி செய்து கீர்த்தி மிகப் பெற்றான்
ஏ. பெரிய தம்பி எனதன்பன் - ஓதக்கேள்
பாட்டுக் கொரு புலவன் பாரதியென்ற ஒருவர்
பாட்டுக் கிவன் என்பன் யான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்யுள்கள்

## கவிஞன் மு. சோமசுந்தரம்பிள்ளை

தென்றற் பொதிகைக் குறுமுனிவன் தெய்வத் தொல்காப்பியன் முதலோர்
என்றுந் திளைத்த தமிழ்க்கடலின் அமுதக் கவிதை கடைந்தூட்டும்
இன்சொற் புலவர் மாமணியே இமைக்குஞ் சுரங்கத் தமிழ் ஒளியே
அன்புக் குருவே பெரயதம்பிப் பிள்ளை ஐயா ஐயாவோ!

அம்பொன் தமிழ்த்தாய் நடைகாட்டும் ஆன்றோர் அறிவுக்கொடைமன்னா!
நம்பொன் மட்டக் களப்பன்னை நல்லாள் பண்பின் நிறைகுடமே!
உம்பொன் உடலத் துள்ளுயிராய் உயிர்க்குந் தமிழோ டுறவாடிச்
செம்பொன்னாடர் நாம் அரற்றச் செய்த களவும் வெளியாதோ!

பெற்றாள் மண்டூர்ப் பேரன்னை பெரிய தம்பிப் பிள்ளையெனச்
சொற்றாள் வற்றாத் தமிழூட்டிச் சுடர்வான் புகழாய் உனைவளர்த்தாள்
நற்றா உள்ளம் நனிமகிழ நடந்தாய் நேற்று நீமகிழ்ந்து
உற்றா ரினத்தோ டுறவாடி ஒழித்த மாயம் ஈதென்கொல்!

அத்தா னென்று நானழைத்தால் அன்பு முகந்தான் நீமலர்ந்து
முத்தாந் தமிழ்த்தேன் துளிதுளியாய் நித்தம் உகுத்தாய் மூத்தறிஞா!
வித்தைக் குருவே மெய்ஞ்ஞான விளக்கே கிழக்கே ஒளிபூத்த
சொத்துச் சுடரே சூழிருளைத் துரத்தா தோடி எங்கொழித்தாய்

சிந்தா மணியில் நீ எழுதுஞ் செந்த மிழ்த்தேன் மணித்துளிகள்
எந்தாய் அழகு தமிழ்க்குலத்துக்கறிவுப் பசியைத் தணியாதோ
நந்தா விளக்குத் தானணைந்தால் நாளை யிருட்டுக் கொளியுண்டோ
வந்தாரெல்லாம் புலவரென வழிநீ கொடுத்து மறைந்தனையோ

நேற்றென் னோடு நீண்ட கதை இன்றோ நீயும் நீண்டதுயில்
போற்றும் புலவர் மாமணியே பெரிய தம்பிப் பிள்ளை ஐயா
கூற்றுக் கென்ன குறைசெய்தோம் ஆற்றிக் கொள்ள முடியுமெனத்
தேற்றிக் கொள்வார் இனியுன்னைத் தேடிக் காண முடியாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்முன் சொரிந்த கனிவாய்ச் சொற் கதைகள் செவியிற் கேட்குதையா
மண்டூர் மண்ணைக் கடைசிமுறை மறவா தன்பால் அணைத்தாய் நீ
கொண்டல் வண்ணன் கோபாலன் கொஞ்சும் மதுரக் குயிலே உன்
பெண்டு பிள்ளை மருகற்கென் பேசிப் புரிந்தெங் கொழித்தாயோ

அழகு தமிழ்த்தாய் பண்பினுக்கோர் அமைதி காட்டும் ஐயா நீ
பழகும் போதோ பெருமனிதப் பண்பு பிறந்து சிறந்தொளிரும்
உழவர் குலமா மணிவிளக்கே உறுதி பயக்குங் கீதைமொழி
வழியால் அழியா மாளிகையில் வாழப் பறந்து சென்றனையோ

சுவாமி விபுலா நந்தர் வழி சுவைக்கும் பாண்டித் தமிழ்த் தாயாம்
பவானி அழகுப் பூங்கொடிக்கோர் பாட்டுப் பணிகள் பலபடைத்தாய்
அவாவை ஒழிக்கும் அருளொளியாம் ஆத்மப் பேறு பெற்றாய்நீ
சிவாய நமத்தேன் சிந்தனையாற் சிறக்கும் உலகஞ் சென்றாயோ.

பூலோகத்து வாழ்வனைத்தும் பொய்யாம் இதற்கோர் ஐயமில்லை
சாலோ கத்தைச் சார்ந்தவர்க்குச் சஞ்ச லங்கள் தானில்லை
மாலோன் கீதை நெறி படைத்த மதுரத் தமிழ்ச்செஞ் சொற்புலவன்
நூலோ துணையெம் பாலோர்கால் நுகர்ந்துகொள்ள வாராயோ

புலவர் மணிதான் மறைந்தகதை பொய்யோ மெய்யோ நானறியேன்
விலகிச் சற்று மறந்திருக்க விருப்பம் எனினும் முடியவில்லை
சிலநாள் மாய வாழ்க்கையிலே சிக்கிச் சுழன்றுந் தெளியாது
பலநாள் நுகர்ந்த சிற்றின்பம் பழகி அறிந்தால் வெற்றின்பம்

உருளும் பெருந்தேர் அச்சுடைந்தால் ஓடா தங்கை கிடந்துவிடும்
உருவாம் உடம்பும் அஃதொக்கும் உயிர்க்கோ உடம்புத் தேர்பலவாம்
வரத்தும் போக்கும் இயல் பாகும் வாய்க்கும் ஞானம் பலித்ததனால்
திருத்துங் கீதைத் தேரோட்டச் சிறப்பாம் புலவர் மாமணிக்கே.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மீது – புலவர்மணி பிரிவாற் பெருந்துயர் எய்திய மண்டூர்க் கவிஞன் மு. சோமசுந்தரம்பிள்ளை பாடியது

நன்றி: சிந்தாமணி 05 – 11 – 1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளல் தமிழ் வாரிதியே கிழக்கின் ஒளி விளக்கே!

- மு. சடாட்சரன் -

அன்றொருநாள் வானொலியில் மரண அறிவித்தல்
அரும்புலவர் மணி இறந்தார் என்றுரைக்கக் கேட்டு
சிந்தைமிக நொந்திடவும் செய்வதறியாது
சிலநிமிடம் திணுக்குற்றுச் செயலிழந்து நின்றேன்
செந்தமிழ்ப்பா வல்லவர்கள் செத்திடுவ தில்லை
செகமறிந்த செய்தியென் ஆறுதல்நான் கொண்டேன்
என்றாலும் புலவர்மணி இணையற்ற அறிஞர்
எம்மோடிங்கில்லையெனும் ஏக்கம்வரும் நெஞ்சில்!

தள்ளாத வயதினிலும் பள்ளத்தில் வீழ்ந்து
ததிங்கிணத்தோம் போடுகிற 'பஸ்' ஏறிச் சென்று
தெள்ளமுத உரைசெய்து தேன்வார்ப்பாய் நெஞ்சில்
தேடுகிறோம் உன்போன்றோர் என்றுவரு வாரோ?
வள்ளல்தமிழ் வாரிதியே! கிழக்கினொளி விளக்கே!
வாடுகிறோம் உன்பிரிவால் வளர் தமிழைக் காக்க,
எள்ளவும் சோராமல் இயங்கியதை எண்ணி
ஏங்குகிறோம் உன் இனிய எண்ணங்கள் வாழும்!

செந்தமிழில் நற்கவிதை செய்தவர்கள் என்றும்
செத்துவிட வில்லையிது செகமறிந்த செய்தி!
முத்தமிழில் சிந்தனையை முடுக்கியவர் எல்லாம்
முப்பொழுதும் சாகாது முன்னெழுந்து நிற்பார்!
என்றுமந்தக் கூற்றுவனுக் கிரையாக மாட்டார்!
எங்கள் புலவர்மணியும் என்றென்றும் வாழ்வார்!

நன்றி : சிந்தாமணி 05 - 11 - 1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி தந்த புலவர்மணி

**- சொக்கன்**

அந்தோ! அருந்தமிழே! ஆளாய் உனக்கன்பு
தந்தே எமக்கொளியைத் தந்தவரைச் - சிந்தையிலே
கொண்டழைத் தின்பக் குலாவலினைக் கொண்டாயோ?
பண்போ எனக்கிலையோ பங்கு?

மூத்து முதிர்ந்து மொழிகனிந்து நற்றமிழால்
சீர்த்த கவிகீதை செய்தளித்தார் - கூர்த்த
மதியமைந்த கட்டுரைகள் மாண்பாக ஈந்தார்
கதிகாணச் சென்றார் கவி.

நன்றி : சிந்தாமணி 05 - 11 - 1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பா

புலவர் அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன்

ஒப்பிலா வீரத் தமிழின் மணித்தீபம்
இப்புவியிற் சோபை யிழந்ததினம் செப்பும்
பதினாறா மைப்பசியாண்டாங்கால யுத்தி
விதிசார்த் துழக்கும் மனம்.

ஆசிரியப்பா

வானங் கவன்று மாரி யுகுப்ப
வாடை துயரா வழி திரிந்தசைய
தமிழைத் துய்ப்பார் தயங்கியுடற்றத்
தனையர் விதியோ என்றழுதரற்ற
இமிழ்தாம் கேளிர் ஏங்கித் தவிப்ப
அமிழ்தாம் தமிழுமழுது புலம்பப்
பதியாம் புலவர் மணியெனும் பெரிய
தம்பிப்பிள்ளை தரணிவாழ் வொழித்து
அமரருலகை யடைந்தனனவனே
கன்னித் தமிழிற் காதல் கொண்டு
சுன்னைக் குமாரசுவாமிப் புலவர்
தொன்மொழி யமுதம் துறைபல தேர்ந்து
வெண்பா விற்கோர் புலவர் மணியென
தன்னேரில்லாத் தகைமை சார்ந்தனன்
முத்தமிழ் வித்தக விபுலானந்த
அத்தனின் நிழலாயன்பனா யமைந்தனன்
மண்டூர்த் திருத்தல மகனாய்ப் பிறந்து
கொண்டதோர் மார்க்கஞ் சைவம் சிறந்து
தீந்தமிழ்ச் சைவம் சேரத்தழைப்ப
ஓதியும் பல்லோ ரோதிட வைத்தும்
ஞான விதையை நாட்டினில் விதைத்தனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகமெலாம் தமிழிற் சைவ முணரப்
பகவற்கீதை பாவிசைத் தளித்தவன்
வித்தக நிறைவால் வித்தகக் காய்ச்சல்
எய்திடா தகற்றி யெல்லார் தாமும்
வித்தக ராக விழைந்தனன் மேலோன்
அடைந்தாரெவரும் அரும்பொரு ளொன்றெனும்
படர்ந்தா ரன்றி வழிவிடா வாசான்
மட்டக்களப்பு தமிழ்ச்சங்கந்தான்
தொட்ட தலைமைப் பீடமமர்ந்தோன்
சாதியும் மதமும் பேசிக் கலாம் விழை
ஏதிலார்க் கடிந்த இனியன் யார்க்கும்
மதுர கவியென நிறைமொழித் திறத்தின்
நீதி பதியென நிறைமொழித் திறத்தின்
முட்டறுத்துணர்த்தும் முது பெரும் புலவன்
கவிஞர்க ளெல்லாம் புலவர்களாக
அவிரொளி பெறுகென வறைந்தனன் தானும்
புலவர் தமிற் பெரும் புலவனாயமைந்தனன்
உதயத் துதித்த ஞான சூரியன்
ஓடி மறைந்தானெனுமுரை கேட்டு
உள்ள முருகா ருண்டோ வுண்டோ?
அந்தோ என்னே அவலக்கவலை
அன்பே யென்ன அறைந்திடுவோமோ
நண்பா வென்ன நவின்றிடு வோமோ
அன்னா யென்ன அலறிடுவோமோ
சிந்தை கலங்கும் சிறியோர்க்கென்சொல்
தந்தனை சென்றனை தமியேம் புலம்பி
இறைவா விவருன் னினைவில் சாந்தி
பெறவீந் திடுவாய் போற்றி
என விரந் திடுக எய்துக மாதோ.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மறைவு குறித்து,
அவரது இனிய நண்பர் புலவர் அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன் அவர்கள் பாடியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council

# மட்டுநகர் மாதா பொலிவிழந்தாள்

**- வித்துவான் க.த. ஞானப்பிரகாசம்**

மீன்பாடும் மட்டுநகர் மாதா பொலிவிழந்தாள்
தேன்பாடுந் தெய்வத் தமிழன்னை - தான்வதியும்
வெள்ளை மலர்மா ளிகையிழந்தாள் பெரியதம்பிப்
பிள்ளை பிரிந்த பொழுது.

ஓர்ந்தோநீ அந்திமத்தை 'உள்ளதும் நல்லதுமாம்'
தேர்ந்ததொடர்க் கட்டுரையைச் செய்துதந்தாய் - ஆய்ந்த தமிழ்
கூறுமுயர் நல்லுலகம் உள்ளங் குழையவைத்தாய்
ஆறுவது எங்கே அவணி.

சங்கத் தமிழ் மணக்குஞ் சான்ற தமிழ்த்தலைமை
எங்கேநாம் காண்போம் இனி ஐயோ! - துங்கமுறு
ஞானப் பொருள்வழங்கி நண்ணுமென் போல்பவர்க்கே
ஆனகலை தந்த அரவை?

நன்றி : சிந்தாமணி 05 - 11 - 1978

Class No:
Acc No 1357



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகவிதை மன்னர்!

**- ஏருவில் மூர்த்தி -**

மீன்பாடும் வாவியதன் மேலோடுங் கொம்பரெல்லாம் மீட்டும் யாழாய்த்
தேன்பாடும் வளநிலத்தின் திருமகனே, செந்தமிழைச் சிவஞானத்தை
வான்பாடும் வகையினிலே வளர்த்திருந்த மாகவிதை மன்னா, எம்மை
ஏன் வாட விடுத்தின்று இறைவனடி சேர்ந்தனையோ! இரங்குகின்றோம்!

முத்தமிழும் வளர்ந்தோங்கி முதன்மையுற உழைத்திருந்த முனிவன், தெய்வ
வித்தகனாம் யாழதனை விளங்கு தமிழ் நூல் வடித்த விபுலா நந்தன்
உத்தமநற் சீடனுமாய் ஓதினிய தோழனுமாய் உயர்ந்தே கீதைத்
தத்துவத்தை வெண்பாவாய்த் தந்தவனே நின்பிரிவால் தவிக்கின் றோம்யாம்!

விருத்தத்திற் கம்பனென்றும் வெண்பாவில் புகழேந்தி என்றும் நின்னைப்
பொருத்தி மொழி ஆய்வாளர் புகன்ற புகழ் உரை கேட்டுப் புளகங் கொண்டு
தருக்கிய எம் உள்ளங்கள் தமிழ் மலையே நீ இன்று சரிந்தாய் என்ற
வருத்தத்திற் துடிப்பதனை வாய்விட்டுக் கூறுதற்கும் வார்த்தை உண்டோ

- 1978 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிச்சிறப்புப் பெரியதம்பிப்பிள்ளை

**- கவிராஜயோகி கபிலவாணன்**

கதிர்காமம் போர்சிறந்த முருகன் கோயில்
கவின்செய்யும் மண்டூரில் வாழ்ந்தி ருந்த,
சதி - பதி ஏ காம்பரன் சின்னத் தங்கம்
சர்க்கரைப்பாய் பெரியதம்பி யைப்பெற் றார்கள்!
மதியரசாய் விளங்குதற்கு மைந்தன் வந்தார்!
மகன்தந்தைக் காற்றுநெறி யறிந்து, கோயில்,
ஆலோசகராய்ப் பெரும் பணியும் செய்தார்.
ஆங்கிலத்தும் நாவரச ரான 'பிள்ளை'.

இனிமையுறும் இளமையிலே தமிழைக் கற்றார்
இலக்கணமும் இலக்கியமும் கண்ணாய்ப் பெற்றார்!
தனியார்வம் சைவத்தில் நாவ லர்போல்!
தன்னெழுத்து வளர்ச்சியினால் உலகத் திற்குக்
கனிந்தசுவை நிறை நூல்கள் யாத்துத் தந்தார்
கடல்முத்தைக் கோத்தாற்போல் 'கீதை வெண்பா'
தனிச்சிறப்பு வாய்ந்ததெனப் புலவர் போற்ற,
தமிழ்க்கவிதை நூல் தந்தார் பெரியதம்பி.

எண்ணெழுத்தை அறிபுலவர் தனக்குள் தோண்டி
ஈன்ற 'பலாக் கனி' 'சீவகன் சரிதம்' உண்மை
மண்மணக்கும் புலவர்மணி கவிதை கள் நம்
மனம்வளர்க்கும் ஊட்டச்சத் துணவாம் கண்டீர்
தண்டமிழில் 'உள்ளதும் நல லது' போல் நன்மை,
தருநூலை தருவார்யார் இவரை யன்றி?
கண்டுச்சொற் களஞ்சியமாய்க் கட்டு ரைகள்
கணக்கின்றித் தாளிகையில் தொடர்ந்து தந்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியதம்பிப் புலவர் மேடை யேறிப்
பேசுவதில் கேசரியாய்த் திகழ்ந்த தாலே,
அரியஉரை நிகழ்த்தற்காய் அழைக்கப் பட்டார்
அரசாங்க விருதும்பல கொடுக்கப் பட்டார்!
வரிக்கோடு வேங்கைக்கே இயற்கைக் கல்வி
வளந்தொண்டு இவரியற்கை தெரிந்து கொண்டு
சரியாக 'அஞ்சல்தலை' வெளியிட் டார்கள்
சான்றோரைச் சிறப்பிக்க அரசாங்க கத்தார்

வஞ்சமிலா இயற்கைத்தாய் வளஞ்சு ரக்கும்
வனமன்றோ சீரிலங்கை...? இந்தத் தீவை
நெஞ்சாரப் பாடியவர் சான்றோ ரோடு
நேயவடம் தொட்டிழுத்த உறவுக் காரர்
தஞ்சாவூர் தட்டுப்போல், தனிச்சி றப்பும்
தண்ணீர்போல் பிறர்க்குதவும் போக்கும் கொண்டார்
மஞ்சு உலா வருவானம் வரைக்கும் நீளும்
மரியாதை பெரியதம்பிப் பிள்ளைக் குண்டு.

இல்லறத்தில் உயர்ந்துநின்ற சைவர் எங்கள்
இரத்தினத்தின் தந்தையவர் சிறந்த மேதை
சொல்லுக்குள் பெயர்வினைப்போல் நூல்க ளுக்குள்
காட்டுகிற திருக்குறள்போல் கீர்த்தி மிக்கார்
நல்லவர்கள் மெச்சுதமிழ்த் தொண்டர், என்றோ
நமைப்பிரிந்து போனாலும் செய்த தொண்டால்,
பல்லாண்டு புகழ் வடிவாய் நம்மில் வாழ்வார்
பாவலர்கள் வரிசையிலே என்றும் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி பிரிவு

## மு.கணபதிப்பிள்ளை "முனாக்கானா"

வடபாகம் பண்டிதனாம் மணியார்வாழ
வளமுள்ள குணபாகம் தாழ்ந்திடாமல்
படைவீடாம் மண்டூரில் தோன்றியெங்கள்
பழமையுறு மட்டுநகர் உயரவைத்தாய்
முடிசூடாத் தமிழ்மன்னன் விபுலாநந்தன்
முத்தமிழை உன்னிடத்தில் தந்தான் தேவர்
படிப்பதற்கோ கொண்டுசென்றாய் பெரியதம்பிப்
பாவலனே கண்திறந்து பதில்சொல்லாயோ.

கோயிலுண்டு மூர்த்தியில்லை குலைவு கொண்டோம்
குடும்பமுண்டு தலைவனில்லை குளறுகின்றோம்
நோய்களுண்டு மருந்துஇல்லை வருந்துகின்றோம்
நூல்களுண்டு குருவில்லை ஏங்குகின்றோம்
சேய்களுண்டு தாயில்லை சிணுங்குகின்றோம்
செவிகளுண்டு கவிகளில்லை திணறுகின்றோம்
நீயிருந்தாய் தமிழ்தந்தாய் நிமிர்ந்துநின்றோம்
நினைந்துருகச் செய்துவிட்டு நீ ஏன் சென்றாய்

குருக்கள்மடம் மீதூரும் முகிலேகொஞ்சம்
குனிந்துவா சொல்லுகிறேன் துயரச் செய்தி
தருக்களூறு கிழக்கீழத் தமிழ்த்தாயின்று
தவிப்பதைநீ பார் இமய தருமன் முன்னே
ஒருக்கணமும் சுணங்காமல் நீபோய் நின்று
உனக்குவைத்த பெயர்தகுமோ என்று கேளு
நெருக்கமுற நீ பொழியும் மழையைப் போல
நீர்பொழியும் எமதுகண்ணைப் பார் போய்ச் சொல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியதமிழ்க் கவிபொழியும் திருவாயெங்கே
இளங்கவிஞர் தனையணைக்கும் திருமார்பெங்கே
புனிததலம் வலம்வருகும் இருகாலெங்கே
புகழுரைகள் கேட்டுவந்த செவிகளெங்கே
மனிதருக்கு நூலளிக்கும் கரங்களெங்கே
மாந்தருக்கு இரங்குகின்ற இதயமெங்கே
இனியிவைக்கும் உரியவராய் வருவார் யாரோ
இறையவனே இதற்குவிடை கண்ணீர் தானே.

உன்முருகன் குலதெய்வம் மண்டூர்க்கந்தன்
உரம்படைத்த சூரனுடன் மோதுதற்கே
பொன்னுருவ வேலெடுத்து புறத்தேபோன
பொழிதினையே பார்த்திருந்த மறலிஅன்று
தன்னுடைய வேலையினை சதிபோல் செய்தும்
தகப்பனைப் போல் உதைக்காமல் விட்டதென்ன?
அன்னவனின் அழகுதமிழ் தன்னை அந்த
அமரர்களும் கேட்பதற்கே உதவினானோ?

**குறிப்பு: - கந்த சஷ்டி விரதகாலத்தில் தான் இவர் பரகதி அடைந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுநகர் தந்தமணி

**மு.கணபதிப்பிள்ளை "முனாக்கானா"**

மட்டுநகர் தந்தமணி; மதியோர்க்குள்ளே
மாமேரு போன்றமணி; தமிழாந்தேனை
கொட்டுகின்ற மேகமணி; குழந்தையுள்ளம்
கொண்டதொரு அன்புமணி; உயர்வு தாழ்வை
வெட்டிவிட்ட வீரமணி; பழகுதற்கோ
மேலான பண்புமணி; இவையனைத்தும்
தொட்டுநின்ற புலவர்மணி பெரியதம்பி
பிள்ளையெனும் திருநாமம் வாழ்க! வாழ்க!

புவிபோற்றும் காப்பியங்கள் புதியநூல்கள்
புராணங்கள் திருமுறைகள் பிரபந்தங்கள்
கவியாற்றல் ஊடுருவி கவிதை கண்டோன்
கற்றவர்கள் போற்றுகின்ற கலித்தொகையை
தனியாகச் சுவைத்தபின்னர் தமிழ் ஏழைக்கு
தாரான மாய்க்கொடுத்தோன் புகழை நாங்கள்
செவியாரக் கேளாது விட்டோமானால்
செவிகளைநாம் பெற்றிருந்தும் செவிடராவோம்.

வெண்பாவில் புகழேந்தி என்றநாமம்
விலக்கிவிட்டு அப்புகழை தனதாய்க் கொண்டு
ஒண்பாவாம் கீதைவெண்பா நமக்குத்தந்தார்
உலகுபுகழ் அறிஞரை ஏற்றுக்கொண்டார்
எந்நாளும் சொல்செயலும் ஒன்றேயான
எங்களது புலவர்மணி கவிதை தன்னை
கண்ணாலே பார்த்துமனம் மகிழாவிட்டால்
கண்களைநாம் பெற்றிருந்தும் குருடராவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயினது உளங்கொண்டு தமிழ்ப்பாலூட்டி
தமிழறிஞர் பலரையிங்கே தவழ விட்ட
நாயகனாம் புலவர்மணி நாட்டி வைத்த
நயமான விருட்சங்கள் பலவுமுண்டு
தூயவிபு லாநந்தன் அடிச்சுவட்டில்
தொண்டுசெய்ய பெரியதம்பி பெரும்பணியை
வாயிருந்தும் பேசாது விட்டோமானால்
வாயதைநாம் பெற்றிருந்தும் ஊமையாவோம்

தைலரும் வயற்களத்தில் கவிகள்பாடும்
தவப்பேறு பெற்ற மட்டு மண்ணின் மீது
துய்யசிவ மணங்கமழும் மண்டூர் தன்னில்
தோன்றியாழ் நகர்சென்றும் புலமைபெற்று
வையகத்தில் தாய்மண்ணை மதிக்கவைத்த
மன்னுபுகழ் பெரியதம்பி வடித்த நூலை
கையினிலே தொட்டெடுத்துப் படிக்காவிட்டால்
கையிருந்தும் சொத்திகளாய் வாழ்வோமன்றோ

மலைவிளக்காய் புகழ்பூத்து உயர்வுகொண்டோன்
மாணவர்க்குச் சுரபியைப் போல் அறிவுதந்தோன்
நிலையாகத் தொண்டு செய்யத் துறவுபூண்ட
நிமலனாம் நமதுவிபு லாநந்தர்க்கு
அலையாக குயில்பத்து பாடிவைத்து
அணிசெய்தோன் சிலையேனும் கண்டுநாங்கள்
தலைசாய்த்து சிரம் தாழ்த்திச் செல்லாவிட்டால்
தலையினால் என்னபயன் சொல்லுமையா.

சொல்லினிமை கொண்டதொட ருரையின்மூலம்
உள்ளதுவும் நல்லதுவும் உரைத்தோனன்று
இல்லையெனில் தமிழ்மரபுக் கவிகளேது
இறைபுகழ்சொற் பொழிவுமிலக் கணமுமேது
எல்லையில்லா இலக்கியத்தின் பொருளுமேது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமதுமண்ணின் புகழேது இவைகள்தந்த
நல்லவனை இதயமதில் அமர்த்தாவிட்டால்
நாமிதயம் வைத்திருந்தும் பயனேதையா.

சேலாடும் பொய்கைகளும் திருஆடும்வயலும்
சிவநெறியும் திருநீறும் தினமாடும் பண்பும்
வேலாடும் முருகனது பதியாம்மண்டூரில்
மிகுமேன்மைக் குடும்பத்தில் வளர்மதியாய் தோன்றி
நூலாடும் மன்றங்கள் அறிவகங்கள் தோறும்
நுண்கலைகள் தந்தவனின் வீடுபதிநோக்கி
காலாடும் படிநடந்து கண்டுதொழா விட்டால்
காலிருந்தும் முடவர்களாய் நாம்வாழ்வமன்றோ

பிறந்தவர்கள் உலகினிலே பலநூறுகோடி
பிறந்தறிஞ ராகியவர் ஒருசிலரேயாவார்
சிறந்தகவிப் புலவர்களாய் சிறப்புகளைப்பெற்று
சிந்தையிலே நின்றோரில் புலவர்மணி மட்டும்
நிறைந்தகுடம் போலமைதித் தொண்டு செய்து
நிகரற்ற பெரியதம்பிப் புலவரது நாமம்
நறையெனவே செவியினிக்க நா பேசாவிட்டால்
நாவிருந்தும் கொன்னையராய் நாம் வாழ்வமன்றே.

நித்தியமும் வெள்ளாடை புனையுமொரு மேனி
நிறையறிவு காட்டுகின்ற பரந்ததொரு நெற்றி
பத்தியொடு திருமுறைகள் ஓதுகின்றநல்வாய்
பார்த்தவரைக் கவர்ந்திழுக்கும் பார்வையுள்ள கண்கள்
சத்தியஞ்சொல் கவிபுனையும் சன்மார்க்க உள்ளம்
சாமிதலம் சென்றடையும் தளராத நடைகள்
இத்தனையும் கொண்டமணி இவ்வுலகில் என்றும்
இறவாத புகழோடு வாழ்ந்திடுவான் மாதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி புகழ்

**- கவிஞர் செ.குணரெத்தினம் -**

முத்துமணிக்கதிர் முற்றிவிளைந்திடும் மூதூராம்!
முக்தியளித்திடும் வெற்றிமுருகனின் பேரூராம்!
வித்தகர்பண்டிதர் வித்துவம் காட்டிடும் விண்ணூராம்!
வற்றிடாதாறுகள் தத்திநடந்திடும் மண்டூராம்.

பண்டுதமிழ்க்கலை இன்றுமெழில்பெறும் கனியூராம்!
கொண்டலெனக் கவி வந்துவிழுந்திடும் கவியூராம்!
அன்புமனங்களைக் கொண்டதமிழ்க்குலம் வாழூராம்!
இன்பமுறுமெழில் பொங்கி வளந்திடும் தேனூராம்!

பச்சைமணிப்பொழில் தைத்துமனங்களி பெறுமூராம்!
இச்சைதரும் வளம் உச்சஉழைப்பினால் உயரூராம்!
பட்சமுடன்தமிழ் வந்து அமர்ந்தநல் பொன்னூராம்!
மட்டுநகர்மகள் கட்டியணைத்திடும் மண்டூராம்!

(வேறு)

கலைவளமும் கவிவளமும் தொழில்வளமும் - பெரும்
கடலெனவே விளைநிலமாம் மண்டூர் தன்னில்
மழைபொழியும் மாதிரியாய்க் கவிசொரிய - தமிழ்
மாதாவோர் திருமகனை மலரச்செய்தாள்

விபுலனுக்குப் பின்னாலே கிழக்கு மண்ணில் - ஒரு
வித்தகனை நாம்காண ஆசைப்பட்டோம்
விபுலனோடு நம்சரிதம் முடிந்துபோகும் - என்று
விம்மிவிம்மி நாளெல்லாம் துயரப்பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையவன் கண்மலர்ந்து சிரித்துநின்றான் - சும்மா
பிள்ளையல்ல பெரியதம்பிப் பிள்ளையாவான்
எல்லையில்லா மகிழ்ச்சியிலே திளைத்துநின்றார் - அவனை
ஈன்றவரும் ஈன்றெடுத்த மண்வாழ்வோரும்

மண்டூரில் தலையெடுத்து ஆசானாகி - புலவர்
மணியாகிப் பெரும் சிறப்புப் பெறுவானென்று
கண்டவரா இவரெல்லாம் தமிழ்த்தாய்தந்த - அந்த
கனியமுதின் சிறப்பியல்பை அவளே கண்டாள்!

கன்னத்தில் கொண்டை போட்டுக் கல்விகற்க - மகனை
கக்கத்தில் தூக்கிவைத்துக் கொண்டுசென்ற
அன்னையவள் சின்னத் தங்கமெனும் நல்லாள் - அன்ற
அடைந்தபெரும் மகிழ்ச்சிதனை அறிவார் யாரோ?

இன்றுஅவள் இல்லையவள் கணவனான - அன்பன்
ஏகாம்பரமும்தான் மறைந்து போனான்
என்றாலும் அவர்பெற்ற எழல்விளக்கு - இன்றும்
எங்களுக்கு அணையாத ஜோதிதானே!

பிறவியிலே கவிஞனாகப் பிறந்தவன்நீ - நல்ல
பேச்சாற்றல் எழுத்தாற்றலோடு கற்ற
உறவுகளைத் தேடிப்போய் ஒட்டிக்கொண்டாய் - நீ
உருவத்தால் உள்ளத்தால் உயரந்தானே!

முத்தமிழ் முனிவனுந்தன் ஆசானாக - ஐயா
முற்பிறப்பில் நீ செய்த பயன்தானென்ன?
கற்றவன்நீ கசடுஅற காலமெல்லாம் - தமிழ்
கலைத்தாயைச் சீராட்டி வளர்த்தவன் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடுக்கோடு நீநடப்பாய் பேச்சும்மூச்சும் - அறிவு
மின்லெனப் பாய்ந்துவரும் கொடியோர்செய்யும்
கொடுமைகளைத் தாங்காது கவிவாள்கொண்டு - வெட்டி
கிழித்தெறிவாய் உன்போல கவியாரய்யா?

தமிழோடு ஆங்கிலமும் கற்றுத்தேறி - அதற்கு
தக்கபடி நின்னறிவை வளர்த்துக்கொண்டாய்
அமிர்தம்தான் தமிழுனக்கு என்றுஆகி - வாழ
நித்தமுமே நீசேவையாற்றி நின்றாய்.

(வேறு)

அரசியலில் பேராசை கொண்டோர்செய்யும்
ஆக்கினையை நானின்றுதானே கண்டேன்
இருதயத்தின் ஈரிதழ்போல் தமிழ்முஸ்லீம்கள்
இருக்கின்றார் எமைப்பிரித்து அழிவுசெய்வார்
அரசியலில் பேராசை கொண்டோர் என்று
அன்றேநீ பாடிவைத்த அற்புதத்தை
உருகிமனம் சிந்தித்தேன் இன்றிருந்தால்
ஒருகோடிப் பாடல்செய்து ஒப்புவிப்பாய்.

ஒற்றுமையை உன்கவிதை வளர்த்து நிற்கும்
உருவான இனச்சமரை உடனழிக்கும்
இற்றரையில் தமிழர்படும் துயரை மாற்றி
இலங்கையிலே சமாதானத் தீபமேற்றும்
சொற்கொண்டலே கவிதை பாயுமூற்றை
சுகமாக இம்மண்ணில் ஓடவிட்ட
கற்கண்டே புலவர்மணிஐயா மீண்டும்
கவிபாட இப்புவிக்கு வந்தாலென்ன!

கண்ணனவன் அருளிய நற்கீதைதன்னை
கருத்தோடு வெண்பாவில் பதியவைத்தாய்
மன்னனெங்கள் யாழ்நூலான் விபுலன்நோயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றிடவே கவிபாடி மறையச்செய்தாய்!
என்னசொல்வேன் இலக்கியத்தின் கலாநிதியே!
எவருனக்கு ஈடாவார்? எவருமில்லை!
சொன்னதுபோல் வாழ்ந்துகாட்டிச் சென்றசெம்மல்
சுகமாநீர் மேலுலகில் சொல்வீரய்யா!

பாலைக்கலி பாடி பாரிலென்றும்
பழசுக்கும் புதிசுக்கும் பாலமிட்டு
நாளைக்கும் நவீனகலை இலக்கியத்தின்
நாயகரும் போற்றிடவே வாழ்ந்து சென்றாய்
ஏழைமனம் உந்தனுக்கு இரக்கம்காட்டி
எப்போதும் உதவுகின்ற வள்ளலே யான்
காளையாக இருந்தவேளை நின்னைஓர்நாள்
கண்டுபேசி சிரித்ததின்றும் நினைவிலுண்டு!

உள்ளத்தைத் திறந்து சிந்தாமணியில்
உள்ளதும் நல்லதும் எழுதியெங்கள்
உள்ளத்தை மகிழ்வித்தாய் மறக்கலாமோ!
உண்மையிலே வைரமணி நிதானையா
வெள்ளம்போல் கவியூறும் நீஎழுத
வெளிக்கிட்டால் அம்மம்மா வீழ்ந்தேன்போனாய்
இல்லையில்லை புலவர்மணி சாகவில்லை
இன்றும் எம்மோடு வாழ்கின்றாரே!

தமிழ்தந்த புலவர்மணி சாவதென்றால்
தமிழ்சாக வேண்டுமது நடப்பதெப்பொ?
அமிழ்தினிய அவர்பேச்சும் எழுத்தும்கூட
அவர்போல சாகாத பொக்கிசங்கள்
தமிழிஸ்லாம் சிங்களவர் பறங்கியென்று
தரணியிலே எப்போதும் பிரித்துப்பார்த்து
உமியளவும் துவேசத்தை வளர்த்திடாத
உயர்ந்தமகான் புலவர்மணி வாழ்வாரென்றும்.

சாதிமதம் பார்க்காது சமத்துவமாய்
சகலருமே வாழ்வதற்கு விருப்பம் கொண்டாய்
மேதினியில் தீண்டாமைக் கொள்கையோடு
மிகநெருக்க மாயிருந்து மக்கள்வாழ
நீதிவழி சொன்னவனே! இந்தநாட்டில்
நீயெந்தத் துறையைத்தான் விட்டாயய்யா?
சோதிவடி வானவனே! விபுலனோடு
சொர்க்கத்தில் வாழஎன்ன வரம்பெற்றாயோ!

திருகோணமலை யாழூர் மட்டுநாட்டின்
திசையெல்லாம் நீசேவை யாற்றிநின்றாய்
ஒருமுறைநான் உன்முன்னால் அமர்ந்திருந்து
உன்வாயால் கவிதைகளைக் கேட்கஆசை
வருவாயா? இல்லையினி வரவேமாட்டாய்
வானுலகில் கவியெழுதி வானோர்மெச்ச
உருவாக்கி தமிழ்ச் சங்கம் நடாத்துகின்ற
உமக்கெங்கெ நேரமய்யா வந்துபோக!

திருக்கோயில் தொண்டுகளில் ஈடுபட்டு
தெய்வபக்தி யோடுவாழ்ந்த குடும்பந்தன்னில்
உருவான காரணத்தால் சமயம் காக்கும்
உயர்வான பக்குவத்தைப் பெற்றுக்கொண்டு
ஒருநூறு பாடல்களை பதிகமாக்கி
உவந்தளித்தாய் அதுபோல கிறிஸ்தவத்தை
ஒரு போதும் மறக்காமல் சென்னைசென்றாய்
ஒருகோடிப் பணியாற்றி உயர்ச்சிகண்டாய்!

கற்றறிந்த நல்லாசான் புவியோர்போற்றும்
கவிவாணன் எழுத்தாளன் கலையில்வல்லோன்
பத்திரிகை ஆசான்நீ பண்புமிக்கோன்
பேச்சாளன் என்றெல்லாம் பணிகளாற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துறையில் எஞ்ஞான்றும் புகழ்மணக்க
எம்மையெல்லாம் விட்டகன்று போய்விட்டாலும்
தொடவுந்தன் பணிதுலங்கும் தமிழ் உலகம்
துலங்குகின்ற வரையுனது பெயரும்வாழும்.

இலங்கைமணித் திருநாடு எங்கள் நாடே!
என்றரிய கவியாத்து நாட்டுப்பற்றை
அழகாக வெளிக்காட்டி அகிலமெல்லாம்
அழியாத புகழ்சேர்த்துக் கொண்டதென்றல்
பலதுறையில் கைவைத்து வெற்றிகண்ட
பண்பாளர் சீர்திருத்த வாதியெங்கள்
புலவர்மணி எனச் சொன்னால் பொய்யாகாது
பூவுலகில் இவருக்கு நிகர் இவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுலகம் போற்றும் செம்மல்

- நயீம் ஷரிபுத்தீன் -

மண்டூர்த் திருப்பதி தமிழ்தாய்க்கு
மகிழ்வோ டளித்த கலைக்கோயில்
பண்டை நூல்கள் பன்னூறு
படித்துத் தேர்ந்து தமிழமுதை
அண்டும் மாந்தர்க் கூட்டியவர்
அலகில் அறிவுத் தேர்ச்சிபெறக்
கண்டே மகிழ்ந்த பேராசான்
பெரிய தம்பிப் பிள்ளையரோ.

தமிழும் சைவமும் இருவிழியாய்த்
தம்மோ டிணைத்துக் கொண்டதனால்
தமிழிலக் கியங்கள் சைவநெறி
தரும்நூல் பலவும் யாத்தவற்றை
தமிழன் னைக்கு அணிகலனாய்த்
தந்தே அழகு பார்த்தவராம்
தமிழுல கம்போற் றும்செம்மல்
பெரிய தம்பிப் பிள்ளையரோ.

கிறிஸ்தவ ரிசுலா மியரிடத்தே
கிடக்கும் தமிழ்த்திற னன்புதனை
அறிந்தவர் நட்பு தனைப்போற்றி
அவாவும் உதவி தனைவழங்கி
செறிந்ததம் அறிவால் நாட்டினிலே
சேர்ந்த இனங்களின் பாலமென
நெறியாய் வாழ்ந்த திருவாமெம்
பெரிய தம்பிப் பிள்ளையரோ.

பகவத் கீதை பகருநெறி
படித்தே அறியாத் தமிழருக்கே
பகவத் கீதை வெண்பாநூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசாய் அளித்தே அதன்பொருளை
அகத்தே இருத்தி வாழ்வுதனை
அழகாய் அமைக்க வழிசெய்த
அகத்தில் என்றும் வாழ்மேதை
பெரிய தம்பிப் பிள்ளையரே.

தன்னுடைத் திருவாம் புலவர்மணி
தகுபுகழ் நாமம் தனைவிரும்பித்
தன்னுடைய நண்பன் ஷரிபுத்தீன்
தமிழ்புல மைக்காய்ச் சூட்டியவர்
தன்னுடைய அரியா சனத்திற்கு
தகுசரி யாசனம் அமரச்செய்தே
தன்னுடைய புகழை ஏத்தியகோன்
பெரிய தம்பிப் பிள்ளையரோ.

மட்டக் களப்புத் தமிழ்ச்சங்க
மகுடம் எனவே தலைமையினை
இட்ட முடனே ஏற்றதனின்
இலங்கும் புகழின் காரணராய்ச்
கிட்ட இருந்தே திட்டங்கள்
கணக்கில் லாது வகுத்துசெயல்
பட்ட அறிவுப் பெட்டகமே
பெரிய தம்பிப் பிள்ளையரோ.

குருக்குள் மடமென் னும்மூரில்
குடும்பம் அமைந்த காரணத்தால்
அருக்கன் எனவே வாழ்ந்தங்கு
அறிஞர் பலரைத் தோற்றுவித்து
செருக்கே யுடைய வித்தகனாய்
சிறந்த மேலோன் எச்சங்கள்
கருக்கொள் மேக மாய்க்கண்ட
பெரிய தம்பிப் பிள்ளையரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கே யோர்வழி வகுத்ததிலே
திடமாய் நின்றே வள்ளலென
மனக்கினி யர்க்கு வழிகாட்டி
மகிழ்ந்தே வாழுங் காலத்தில்
தனத்தால் குலத்தின் பெருமையதால்
தட்டத் துணிந்தோர் தன்னைத்தட்டிச்
சினத்த வணங்கா முடியானார்
பெரிய தம்பிப் பிள்ளையரே

இத்தரை யில்தமிழ் உள்ளளவும்
இலங்கும் ஒளிச்சுட ராய்நின்று
பத்தரை மாற்றுத் தங்கமெனப்
பதிந்தே தமிழர் மனத்துறைந்து
வித்தக ராக வழிகாட்டி
வாழ்ந்தே இறப்பே இல்லையென
செத்தும் வாழும் மூதறிஞர்
பெரிய தம்பிப் பிள்ளையரே.

புலவர் மணிநூற் றாண்டதனில்
பயன்மிக் கன்னார் நூல்களெலாம்
நலமா யனைவர் கரங்களிலும்
நிலைக்க வழிசெய் திடல்வேண்டும்
பலவாய் அச்சில் புகாதவைகள்
பதிக்க நினைவுக் கழகங்கள்
அலகில் லாத முயற்சிகளை
அளித்தல் வேண்டும் நன்றியுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்பாவிற் புலியெங்கள் புலவர்மணி

- நியாஸ் ஏ.சமத் -

தரணி பலநல்ல சான்றோரைத் தாங்கிப்
பெருமைமிகப் பெற்றதது போல - திரு.பெரிய
தம்பிப் புலவர் மணியிறக்கப்பூ ரிப்பால்
எம்பிக் குதித்தாள் தமிழ்.

தமிழறிஞர் பாவின் தலைமகனார் நல்ல
தமிழாசான் பன்நூல்கள் தந்தோன் - தமிழில்
புலமைமிகப் பெற்றுப் புலவர் மணியாய்
இலங்குமவன் பேர்வாழ்க வே.

வாழ்விற் றமிழை விரும்பி அதுதன்னை
ஆழ்ந்து துறைபோக ஆய்ந்தறிந்து - வாழ்ந்த
பதியின் பெருமையினை பாரறியச் செய்த
பதிக்கேதான் மேலாம் புகழ்.

புகழ்பூத்த மட்டுத் தமிழ்ச்சங்கம் தோன்ற
முகவுரை யான முதியோய் - அகத்தியனார்
தந்ததமிழ் மங்காது தொன்மையுறக் காரணரே
புந்தி மிகுபுலவ ரே.

'புலவர்க்கு வெண்பா புலி' என்னும் மெய்யைப்
புலமைத் திறந்தாற்பொய் ஆக்கி - புலவரிடை
வெண்பாப் புலியென்னும் வாழ்த்துரை பெற்றேயிம்
மண்புகழ் வாழ்ந்தார் அவர்.

அவர்சார்ந்த சைவ அறந்தளைக்க என்றும்
எவர்தமக்கும் முன்னோனாய் வாழ்ந்து - புவியோர்
விரும்பும் வகைதன்னில் வெண்பாவில் கீதை
உருச்செய்து பெற்றார் உயர்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தநற் பண்பும் ஒப்புயர் நோக்கும்
பயனுள்ள நற்கருத்துங் கொண்டே - அயலுள்ள
வேற்றூரின் மக்களோடு வேற்றுமையற் றேயிருக்கும்
ஏற்றத்தை சொன்ன மகான்.

மகானெனக் கற்றோர் முதன்நிலை தந்து
மகோன்னத வாழ்வோடு வாழ்ந்து - வகையாய்க்
கலையோங்கி நிற்கக் கருவான முன்னோன்
கலைமகள் ஏற்றுங் குரு.

குருக்கள் மடமே குடும்பபதி தான்செய்
குருத்தொழில் மூலம்தான் போன்றே - அருந்தமிழைக்
கையாளத் தக்க கவிஞர் பலதோன்றி
மெய்யாய் உழைத்தபெரு மான்.

மெய்யிருந்தே ஆவியிறை மீழும் வரையினிலும்
வையத்தில் தாய்மொழிக்குத் தன்திறனால் - செய்யத்
தகுஞ்சேவை யாவும் தவறாதே செய்த
தகைதரணி போற்றும் படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்மொழிப் புலவர் த. கனகரத்தினம்

வெண்பா

மீண்பாடும் வாவியெலாம் தேன்பாயு மட்டுநகர்
வான்றோய் புலவர்தம் சாவமன்றோ - தன்கவியாய்
மண்டூர்ப் புலவர் மணிக்கே தமிழ்ச்சங்கம்
கண்டிடும் அஞ்சலிப்பா காண்.

வெண்பாவிற் பெயர்பெற்ற மண்டூர்ப் பெரியதம்பி
ஒன்பாவிற் கீதை ஓதினானே வண்டமிழிற்
பாட்டுக் கொருபுலவன் பாரீர் இவனென்றே
நாட்டுவோம் செய்யுள் நயந்து

இலங்கை மணித்திரு நாடெனும் கீதம்
துலங்கக் கவிதந்த தூயோய் - இலங்கும்
கலங்கரை நல்விளக்கே காரிருள் சூழக்
கலங்கினோ மாழ்கடலிற் காண்.

நல்லைநகர் ஆறுமுக நாவலரின் வாரிசெனச்
சொல்லு தமிழ்கற்ற சோதியே - எல்லையில்
இன்பக் கவிமழையில்லாப் பயிரானோம்
துன்பக் கடலினிற் றோய்ந்து.

சுன்னைக் குமார சுவாமிப் புலவர்பால்
முன்னைத் தமிழ் முழுதுணர்ந்தே - பின்னையும்
தூயவிபுலானந்தர் சோதி மலரடியில்
நேயமெலாம் வைத்தாயே நெஞ்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமா மணிதன் பிள்ளையுடன் மாணவனாய்
எண்டிசை போற்ற எழுவானில் - அண்டிநிதம்
குன்றின் விளக்காய்க் குருக்கள் மடஞ்சார்ந்து
நின்ற புலவர் நினைவு.

எண்ணரிய ஆசிரிய மாணவ ரேற்றமுறக்
கண்ணிய ஆசானாய்க் கல்வியூட்டி - மண்ணுலகைப்
பாட்டினாற் பாலித்த நற் பாவலனே! உன்நினைவால்
நாட்டினோம் செய்யுள் நயந்து.

முன்னைப் பழமைக்கு மூத்தோனாய்ப் பாவுலகிற்
பின்னைப் புதுமைக்கும் பேர்பெற்றோய் - உன்னைப்போல்
மண்ணிற் புலவர் மணியாரே யென்றேங்கி
எண்ணிச் சுழலுமெம் நெஞ்சு.

பேச்சிற் பெரியதம்பி பேரும் பெரிதாக
மூச்சும் தமிழான மூதறிஞன் - பேச்சடங்கிக்
கார்த்திகை நாளிரண்டிற் காலன்வாய்ப் பட்டானே
சார்த்தினோம் அஞ்சலியே சார்ந்து.

கிழக்கி லெழுந்த கீர்த்திவிடி வெள்ளி
முழக்கி முகிலாய்ப் பொழிந்தால் - துளக்குகவி
தேசம் மறக்குமோ தீந்தமிழர் உள்ளத்தில்
நேசத்தால் நீங்கா நினைவு.

வாழிய செந்தமிழ்
வாழிய நற்றமிழ்ப் புலவர்.

மட்டுநகர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் நினைவிற்காகக்
கொழும்புத்தமிழ்ச்சங்கம் அளித்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி

## சைவ மாமணி வீ. விஸ்வலிங்கம் பண்டிதர் -

கீதை தமிழ் செய்து கீர்த்தி மிகப்பெற்றுவரும்
சாதனைகள் தெய்வத் தமிழ்மொழியிற் செய்தவரும்
தில்லை மண்டூர் முருகன் திருவருளின் பேறாக
செல்லக் கதிர்காமத் திருமுருகன் சன்னிதியாம்

குருக்கள் மடப் பெருமை குவலயமெலாம் விளக்கி
அரும்பணிகள் செய்தவருமான புலவர்மணி
பெரியதம்பிப்பிள்ளை எனும் பேருடைய நல்லறிஞர்
கருவில் திருவுடையான் கற்றவதற்கு நல்லாசான்

வாழ்ந்து மறைந்த பதி வாழையடி வாழை என
ஆழ்ந்த தமிழ்ப் பேரறிஞர் பலர் தோன்றி எங்கும்
தீந்தமிழின் வளர்ச்சிக்குச் சேவை செய்யும் நற்பதியாம்
குருக்கள் மடப்பெருமை கூறும் தரத்தாமோ

நிமிர்ந்தநடை மெலிந்தஉடல் நீளுருவம் வெள்ளாடை
கனிந்தவிழி உயர்நெற்றி கம்பீரமான குரல்
எவரிடமும் கெஞ்சாமை எதுவரினும் அஞ்சாமை
புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை இவராகும்!

ஈழக் கீழ்வானின் இலக்கியப் பரம்பலிலே
கிளர்ந் தெழுந்த ஞாயி றிவர்
ஆழக் கதிர்பரப்பி அத்தனையும் சூடேற்றி
வாழும் தமிழின் மரபைப் புதுமைக்குள்
கலக்கவிட்டு கனக்கவிட்டு கதகதப்பை ஊட்டியவர்!

வெண்பாவில் புகழேந்தி மீண்டுமுயிர் பெற்றதுபோல்
வெண்பாவில் கீதைதந்து மேதினியில் புகழ்பெற்றாய்
கற்றார் ஏற்றும் கலித்தொகையில் பாலையினை
வற்றாத தமிழூற்றாய் மணம்வீச விட்டிருந்தாய்
மீட்சிப் பற்றினிலே விபுலானந்த மாமணியை
ஆட்சி விளங்க அழகாகச் சித்தரித்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதும் நல்லதுமாய் உரைத்த உணர்வலைகள்
உள்ளவரை சமூக உயிரோட்ட மாயிருக்கும்
புலவர்மணி பாடல்களாய் புனைந்த தமிழ்மாலை
நிலைத்து மணம்கமழும் நின்புகழும் உடன்கமழும்
தனித்தனிப் பாடல்களில் சமூகத் தளங்களெல்லாம்
ரணசிகிச்சை செய்தவெங்கள் தலைமகனே நீவாழ்க!

சமூகக் கொடுமைகளை சாகடிக்க வேண்டுமென்று
திடமாய் உழைத்திட்ட சீர்திருத்தக் காரன்நீ
ஆலயங்கள் பலவற்றின் அழிவுக்கு வழியமைத்த
குலவழக்கு, குடிவழக்கு, சாதி சமூகமைப்பு
என்பவற்றைப் போக்கியே எத்தனையோ ஆலயங்கள்
மீண்டும் செழுமையுற வேண்டி யுழைத்தவன்நீ!

தேசியத்தை நோக்கியே சிறகடித்துப் பறந்துவிட்டு
தேசியமே பாசிசமாய் சிறகொடிந்த நிலைகண்டு
வெந்து கனன்று விழிநீர் சொரிகின்ற
இந்த நிலையிலுன்னை எண்ணிநான் பார்க்கின்றேன்!

எல்லைச் சுவர்களே இல்லையுந்தன் ராச்சியத்தில்
உள்ளும் புறமும் ஒன்றுதான் உந்தனக்கு
கொள்கையொன்று செய்கையொன்று என்றுமே வாழாமல்
அள்ளக் குறையாத அறிவூற்றாய் போய்விட்டாய்!

தமிழுக்கு தொண்டுசெய்வோன் சாவதில்லை, ஐயாநீ
தமிழென்றும் சமயமென்றும் சமூகமென்றும் நாளெல்லாம்
ஓடி யுழைத்தாலும் உடலமது தேய்ந்தாலும்
வாடி யிருந்ததில்லை மனம்சோர்ந்து போனதில்லை
தேடியுனை வந்தவரை தீண்ட மறுத்ததில்லை
கோடிபணம் சேர்த்துந்தன் குடும்பத்தைப் பார்த்ததில்லை
கலையரசே உந்தன் கதைபடிப்போர் நாளை
புவியரசன் இவனென்று போற்றுவது நிச்சயமே!

(1994 –புலவர்மணி நூல் வெளியீட்டு விழாவில் பாடப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி கவிதாஞ்சலி

-கவிக்கோ வெல்லவூர்க் கோபால்-

சங்கத் தமிழாய்ந்த தகைசால் பெருவளவன்
மண்டூர் முருகனுறை மதிவாணன் - என்றும்
இறைபணியில் ஏகாம்பரப் பிள்ளை யெமக்களித்த
பெரியதம்பிப் பிள்ளையெனும் பேறு!

செந்தூர்த் தமிழ்பாட செவ்வேள் நடமாடும்
தில்லைப்பதி மண்டூர். அறிஞர்பலர்
வந்துபிறந்ததையும் வாழ்ந்து சிறந்ததையும்
வரலாறு சுட்டிநிற்கும்
மண்டூர்க் கீரை வழுதுணங்காய் பலாக்காய்
என்றால் அதற்கென்றே இனியசுவையிருக்கும்
திருவிழாவுக்கும் தீர்த்தக் கரைக்கும்
பெருகும் சனக்கூட்டம்
பிட்டும் தயிரும் தேன்சொட்டும் பலாக்கனியும்
உண்டுகளிக்காமல் ஊர்கள்போய்ச் சேர்வதில்லை
அங்கே....
ஏகாம்பரப் பிள்ளைசிறப் பேற்றும் பெரும்குடியில்
பேராளன் பெரியதம்பிப் பிள்ளை பிறந்ததுவும்
தமிழைக் கடைந்துபுகழ் சங்கம் வளர்த்ததுவும்
அமுத மனைபுகுந்து அகப்பே றடைந்ததுவும்
ஆல்போல் விழுதுகளை ஆழப் பரப்பியதில்
கோலோச்சித் தலைமகனாய் குலம்சிறக்க வாழ்ந்ததுவும்
புகழேந்தி வரிசையிலே புலவர்மணி தமிழ்ப்பணியில்
வைரமணி யாகியொரு வரலாறாய் ஆனதுவும்
கடல்கடந்த நாடெல்லாம் கொடிகட்டி வாழ்ந்தமகன்
பிடிசாம்ப ராகித்தன் பெயர்நிறுத்திக் கொண்டதுவும்
நாளை யுலகமவன் நனைவிடை தோய்வதற்கு
காலம் எழுதிவைத்த கல்வெட்டாய் ஆனதுவாம்!

- 1994 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி

**- பல்கலைவேந்தன் சில்லையூர் செல்வராஜன் -**

தேனாகப் பொன்நிலவு
திகழ்கின்ற ஓர் இரவில்
தெய்வத்துள் தெய்வம் என் தாயானாள்
எம்மனை முற்ற மணல் திருத்தி
அன்போடு தன் அருகணைத்து
என் விரலைப்பற்றி

தேனாகப்... பற்றி - 2

'அ' என்ற ஓர் எழுத்தை
அழித்து அழித்து அம்மணல் மீதில்
அன்று எழுதப் பயிற்ற - இன்றோ
பேனாவைப் பிடித்தெழுதும்
உரை எழுத்தும் கவி எழுத்தும்
தலையெழுத்தாய்ப் பிழைப்பாய்க்
கொண்டேன்.

நான் ஆன போதும்
தம் நாளாந்த சோற்றுக்கும்
ஆடைக்கும் நலிவோர்க்காய் பொருக
என் வாழ் ஆனாளே தமிழ்
என்றிங்கன்பரெல்லாம் போற்றுகின்ற ஆச்சி
உனை முதலில் அடிபணிந்தேன் போற்றி.

தம்மைத் தாம் மதிக்காத தமிழ்ப்புலவர்
பரம்பரையில் தப்பி வந்து - 2

மெய்மைக்கே கவித்திறனை அர்ப்பணமாய் வைக்கின்ற
மேன்மை சான்ற எம்மை - இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்மணி விழாக்களத்தில் கவியரங்கை - இயக்க வைக்கும்
செம்மைசால் சங்கத்தீர் செழும்கவிகாள்
செந்தமிழைக்கேட்டு உவந்தே - உம்மை
எமக்கு ஒப்படைக்க உளம் கொண்டு வந்திருக்கும் உயர்ந்தோரே.

அன்று அம்மை தனது உமிழ்நீரைப் பிளிச்சிவிட
வரவேற்றுக் கவி புனைந்தோர்
தன்மை சிறிதேனும் இலாத் தான்தோன்றிக் கவிராயன்
தலை சாய்க்கின்றேன் - உன் மொழிவாய்
தலைமைப்பா மொழிந்து பின்னர்
கவியரங்கை முடுக்கி வைப்பேன்.

தொண்ணூற்றாண்டின் முன்தோன்றி புலவர்மணி
இந்நூற்றாண்டின் முக்கால் எழுந்த முக்கால் சகாப்தத்தில்

தனிநேரிலாத தமிழ்க் கவிதை முத்துக்களை
பன்னூறு பன்னூறாய்ப் படைத்து ஈழமண்டலத்தின்
பன்னூறு தமிழ்வளத்தை பார் எங்குமே சொரிந்த
விண்ணாளனாய்த் திகழ்ந்த வித்தகத்தைப் போற்றுகின்றேன்.

பன்னாறு தமிழ் வளத்தை பார் எங்குமே சொரிந்த
விண்ணாளனாய்த் திகழ்ந்த வித்தகத்தைப் போற்றுகின்றேன்.

பத்து வயதில் பழம் தமிழின் பா விதிகள்
அத்தனையும் துறை போக ஆழப்பயின்று கவி - 2

எத்தனையோ யாத்த ஏ. பெரிய தம்பியென்னும்
உத்தமப் பேராசானை உளம் கனிந்து பூசிப்பேன்.

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம்
பண் ஆளம்தன்னைப் பாடம்கேட்டுப் பயின்று
சூடாமணியும் நிகண்டும் திருச்செந்தூர் ஏடாம்
புராணமும் ஈழக் கலாசாரப் புதையலெனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தபுராணமும் பாரதமும் விதை பேரக்கற்று
விளைந்த செறிந்த அறிவால்
மண்டூர்ப் பதிகம் எனும் மீட்சிப் பத்து தொடக்கம்
பண்டு புகழ் சீவக சிந்தாமணியின் - உள்ளடக்க
நாமகள் இலம்பகமாம் நாடக நூல்
சத்து மிகும் தேமதுரப் பாலைக்கலி

பகவத்கீதை வெண்பா வரையாக
காவியங்கள் வரைந்து
பலவேறு உரைநூல்களும் செய்த
உயிராற்றல் படைப்பாளி...

வெண்பாவிற் புகழேந்தி என்ற வியன் மொழியை
தன் 'பா' திறத்தின் தரத்தால் அழித்து எழுதி - 2
புலவர்மணி வெண்பாப் புலி என்ற
புதுப்பட்டம் இலகத் திகழ்ந்து உயர்ந்த
இன்மரபுப் பாட்டாளி பாட்டு ஆளி

வெண்பாவிற் ... பாட்டு ஆளி - 2

கீதை வெண்பாவால் முதன்மைக்
கீர்த்தி படைத்த கவி மேதை பெரியதம்பி
மெல்லடிகளைத் தொழுதேன்
எல்லாவற்றிலும் மேலாய் இதயசுத்தி பெரியமனம்
நல்லாரை மட்டுமன்றி அல்லாரையும்
அணைக்கும் ஆன்ம விசாலம் எனும்
அருங்குணங்கள் வாய்ந்த பிற
மேன்மக்கள் யாவரையுமே நான்
கண்டதில்லை உண்மை...
எல்லாவற்றிலும் மேலாள்... உண்மை - 2

நேரே அவரோடே நேசித்து மட்டுமன்றி
போரே இலக்கியத்தில் புரிந்தும் பழகியவன் - 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என்பதால்
சான்றோடு எனக்கு நிகழ்ந்த ஒரு சம்பவத்தை
இங்கே நான்
சாற்ற விழைகின்றேன்.
நேரே அவரோடே ... விளைகின்றேன் - 2

சர்ச்சை ஒன்றில் அவர் கருத்தைத் தாக்கி எழுதிவிட்டேன் - 2
அச்சமயம் எங்கும் அதே பேச்சாய்
ஈழத்தில் வாதங்கள் மூண்டு கலை வட்டத்திலே
கட்சிப் பேதங்கள் ஏற்பட்டு ஓர் பிரிவினையே தோன்றிற்று
அவ்வேளை - 2
ஓர் கவியரங்கில் அவர் தலைமை - 2
வெவ்வேறாய் 'பா' மொழிய விளைந்தோரில்
நான் ஒருவன் இவர்களைப் போல - 2
அவ்வேளை....- 2

அறிமுகம் செய்கையிலே ஐயா
எனை விளித்துக் குறியாகச் சொன்னார் - 2
குதிரைக்காரக் கவிஞர் இவர் என்றே.

அறிமுகம் செய்கையிலே... என்றே - 2

துணுக்குற்றேன் மறுநொடியில்
அவையோர்கள் மண்டபமே
அதிரக் கரகோஷம் கொட்டியே
கேலியாய்க் கோஷம் புரிந்தார்கள்
குதிரைக்காரக் கவிஞர் இவன்
என்றே சொன்னவுடன்
அவையோர்கள் மண்டபமே
அதிரக் கரகோஷம்
கொட்டியே புரிந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டென்று நிறுத்துங்கள் சத்தத்தை - 2
என்று அடக்கி
செப்பினார் சில வார்த்தை
சிந்திக்க அன்பர்களே
இப்போது கூட என் இதயம் சிலிர்க்கிறது.

சட்டென்று நிறுத்துங்கள் சத்தத்தை... சிலிர்க்கிறது - 2

குதிரைக்காரக் கவிஞன் இவன் என்றா சொன்னேன்
குதிரைக்கு நடை பழக்கும் சூட்சுமமோ லேசன்று - 2
குதி பாய்ச்சல், காவல், அணி வகுத்தல், தடை தாண்டல்
நின்றபடி கால் வலித்தல், நிலை சுழலல், நிமிர் நிற்றல்
என்று பலவாறாம் எழில் நடைகள் குதிரைக்கு

குதிரைக்காரக்.... குதிரைக்கு - 2

தமிழுக்கும் நடையழகு தனியழகு - 2
பல்வேறு தமிழ் நடைகள் பழக்கும்
கலை தேர்ந்த பாவலன் இச்சில்லையூர்ச் செல்வன்
என சிந்தையிலே நான் வியந்தே
சொல்ல விழைந்தேன் அவரைக்
குதிரைக்காரக் கவிஞன் என்றேன்
எனப் புகழ்ந்தார்.

தமிழ் நடை பழக்கும் - 2
எழுந்தகர ஒலியில் மன்றம் அதிர
மறுபடியும் பூரித்துக் கண் பதித்தேன்
இவ்வாறாம் கண்ணியப் பெருமானை
மண்மேலே இன்றைக்கு மருந்துக்கும்
காண்போமா
இவ்வாறாம் கண்ணியப் பெருமானை
மண்மேலே இன்றைக்கு மருந்துக்கும்
காண்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோன் பெரியோன் தான்
பெரியதம்பிப்பிள்ளையென்று தெரியாமலா
பெற்றார் திருநாமமிட்டார்கள் - 2
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பார்கள்
பெற்றேன் அன்றைக்கு அந்தப் பெரியோனை
ஆசானாய்....
பெற்றேன் அன்றைக்கு அந்தப் பெரியோனை
ஆசானாய்...

அன்றுமுதல் நேசர்களாய் ஆனோம் உளம் கலந்தோம்
இன்று புலவர் மணி இருந்தால் என்னாகும்
எனச் சிந்தித்துப் பார்க்கின்றேன். - 2
செய்ய கவித்துறையில் செந்தொடை என்கின்ற
சிறு நுட்பச் சுவை கூட அறியாமல்
வெற்று ஆரவாரம் செய்யும் விறுதாக்களை எண்ணி
செந்தொடை என்கின்ற சிறு நுட்பச் சுவை கூட அறியாமல்
வெற்று ஆரவாரம் செய்யும் விறுதாக்களை எண்ணி

விசனக் கவிதைகளை வசனக் கவிதைகளாய்
வந்திப்போர் கூட்டத்தில்
திசை நோக்கிக் கும்பிட்டு - என்
சிறு கூற்றை முடிக்கின்றேன்...

புலவர்மணி சிறப்பை போற்றுதற்கு வந்துள்ள
புலவர் கனகரெத்தினம், சிவநெறியின் செல்வா
இரா மயில்வாகனம் கவிஞர் செரிபுதீன்
செல்வி ஸ்ரீ குமாரி சீர் கதிரித்தம்பி மகள்
ஆதியாம் பேரில் அழகுதமிழ்க் கவிதைச் சேரிகளை
நீங்கள் செவி மடுக்க விடுகின்றேன்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற புலவர்மணியின் 96வது பிறந்தநாள் விழா அன்று வழங்கியபாடல். - 08.01.1995 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலிப்பா மலர்

**- செல்வி. ஸ்ரீகுமாரி கதிரித்தம்பி -**

நாயகனாம் அமரர் புலவர் மணி அவர்களுக்கும்,,
விழாத்தலைவருக்கும்,
சங்கத்தின் செயல்மிகு செயலாளருக்கும்..
கவியரங்கத் தலைவருக்கும்,
கவியரங்கு அமைக்க வந்த மூத்த கவிஞர்கட்கும்
சிறப்புச் சொற்பொழிவாளருக்கும் - மற்றும்
அன்புசால் அவையினர்க்கும்
கவியுலகில் தவழும் குழந்தை இவளின் இனிய நல்
வணக்கங்கள்!

அந்த நாளினில் கிழக்கினில் பண்டிதர் என
அன்பாய் நம்மவரால் பகர்ந்திட்ட ஒருவர் உளரேல்
புலவர்மணிதான் அவர் என ஏடுகள் பகருது

யான் கண்டறியேன் அவர்தம் தோற்றம்
யான் கேட்டறியேன் அவர்தம் குரலை - ஆனாலும்
யான் படித்தறிந்தேன் அவர்தம் பாக்களை
அவையே அவர் பெருமை சாற்றிடுது எனக்கு

மட்டுநகர் மைந்தனாம் புலவர்மணி
மக்கள் கவிஞனாம் புலவர்மணி
விண்ணிலே சுடர் போன்று வேர் பிடித்த
மண்போன்று தன் பாட்டுக்குள்
பலகருத்தைப் பதிய வைத்துள்ளார்- அவர்
மக்களுக்காய் பாடிவைத்த மாகவிகள் எத்தனையோ
சிந்தனைக்கு விருந்து வைத்த சிறு கவிகள் எத்தனையோ
இலங்கை மணித்திருநாடு எங்கள் நாடு - எனக்
குரல் கொடுத்துக் குதூகலித்தார் குயிலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரத்து சீரிய கருத்துள்ள
கானல் வரிப் பாடலுக்கு
சற்றேனும் தரங்குன்றாப் பாடல் அது
கல்லோயா நங்கை எனப்
போற்றுகின்றார் பண்டிதமணி.

கல்லோயா ஆற்றினது ஓசை ஓய்ந்திடாமல்
ஒலிந்திட்டே பாய்வதனை ஒரு வேளை
பாடி மகிழ்ந்தாரோ புலவர்மணி
அடியேனின் எண்ணம் இது.

அவர்தம் பாடல்கள் கன்னியாய் திருவில்
கன்னியாய் குன்றுகள் என்றுமே ஓயாமல்
ஊற்றெடுத்துச் சுரப்பது போல்
ஊடுருவிப் பாயுது அவர்தம் பாநயம்
நம் மனத்தினிலே.

இலக்கிய விரும்பிகள் கலக்கியே குடித்திட
இலக்கிய விரும்பிகள் கலக்கியே குடித்திட
இனியதோர் காவியம் பாலைக்கலி தந்துள்ளார்
அவர்தம் சங்கநூற் புலமையை
சாற்றிடுது இந்நூல்.

உலக முவப்புற உரைக்கும்
நூற்பொருள் தெரிவார்
ஒருவர் தமக்கு ஒருவர் - நிதம்
ஒப்புரவு புரிவார்.

பலதிசையும் சென்று
முயன்றீட்டு பெரும் பொருளார்
பரமனடித் தொண்டு
புரிந்தேத்து திருவருளார் - என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சிக் கொப்பிலேற்றி
உயர்வாய் பாடிட்டார்
யாழ்ப்பாணத்து மக்களை
ஒற்றுமை மந்திரத்தை
உணர்ச்சியுடன் உச்சரித்த
கற்ற அறிவினை - தாயின்
கடமைக்காய் அர்ப்பணித்த
கருணைவள்ளல் தம் பெருமை
கூறிட முடியாது.

தீ போல் கொதித்தெழுந்து
தியாகப் பணி புரிந்து
மீட்போம் என்று ஆணையிட்டுத்
தமிழ் மொழியை
காப்போம் எனக் கனன்றிட்டார்.
புலவர் அவர்.

சிங்களமும் செந்தமிழும் சேர்ந்து சமமேயிலங்கை
எங்கும் அரசமொழியெனவே - துங்கமுடன்
ஆட்சி புரியவழி ஆக்குவதே எல்லோரும்
மாட்சியுடன் வாழும் வழியென வாஞ்சையுடன்
அன்றெமக்கு அஞ்சாமல் கூறிவிட்டார்.

நம் இனிய தமிழ்மொழியை நல்லபல கவிதையினால்
சீரிய நல் வெண்பாவினால் நல்லறிவுக் கட்டுரையால்
புதுமை பல செய்தார் நம்மவர் போற்றிட
தரணியிலே தரம் உயர்த்தி வைத்தார்.

மெய்கண்டார் ஆதீன சபையால்
மதுரகவி விருது பெற்று
மட்டுநகர் மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை என உயர்ந்திட்டார்.
பகவற்கீதை தனை வெண்பாவில் படித்திட்ட
அவர்தம் ஆற்றலைப் பகரவா? இல்லை
இராமாயணத்தையும் சிலப்பதிகாரத்தையும்
அழகுதமிழில் தந்திட்ட அறிவினைப் பகரவா?
பகவத் கீதையினை வெண்பாவில்
பாடி எமை பரவசத்தில் ஆழத்தியதால்
சாகித்திய மண்டலத்தின் சன்மான
விருது பெற்று சாலவே உயர்ந்திட்டார்.

உயர்தகு வித்தகர் புலவர் மணியின்
உள்ளதும் நல்லதும் என்னும்
உயரிய உரை நூலுக்கு
இலங்கை அரசு வழங்கியது
இலக்கிய வித்தகர் எனும் விருது.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின்
தத்துவப் பிள்ளையாய் உத்தம சீடனாய்
பெருமை பல பெற்றதுடன்
தமிழன்னை மைந்தனாய் தமிழ் செய்தார்
தமிழ் வளர்த்தார் தமிழைப் பேணினார்.

பகவத் கீதை வெண்பாவிற்கு செந்தமிழில்
பாங்காக சிறந்த நல்லுரை செய்தார்
சீரிய புகழ் கொண்டார்
புலவனாகி நம் மண்ணில்

நல்லாசிரியனாய் மட்டுமன்றி
மதவுரைகள் பல பொழிந்து
சீறுகவிகள் பல சொரிந்து
சிரிய நற்பணி செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடுகள் சாற்றிடும் அவர் பெருமை - நம்
நாடு சொல்லிடும் அவர் உயர்வை

நான் சொல்ல வேறில்லை இங்கு
அவர்சொல் வண்ணம் நாம் நடந்து
அவர்வழி நின்று தமிழ் காப்போம்.

பல்வண்ணம் 'பா' தந்த
பண்டிதர் புலவர் மணி வழி
தமிழ் வளர்த்திடுதலே நம்
நாட்டறிஞர் செய்யும்
நயமிகு நன்றிக்கடன்.

அன்பினிது பொங்க அறம்பொங்க ஆருயிர்கள்
இன்ப சுகம் பொங்க இனிதாக - தென்பொலியும்
சங்கத் தமிழோசை தரணியெலாம் பொங்க
பொங்குக தைப்பொங்கல், பொலிந்து
என நான் வாழ்த்தவில்லை - எதிர்வரும்
பொங்கலுக்காய் ஏற்கனவே வாழ்த்திட்டார்
நம்மக்களை, நம் புலவர்மணி.

இவ் இனிய நன் நாளில் அவர்வழி
நம் அறிஞர் சென்றிட வேண்டி
நிற்பதுடன் விடைபெறுகின்றேன்
இவ்வரங்கில் நின்று அவர்தம்
தமிழ்த் தொண்டினை வணங்கி.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற புலவர்மணியின் 96வது பிறந்த நாள் விழா
அன்று வழங்கிய பாடல். - 08.01.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலிப்பா மலர்

- புலவர் த. கனகரத்தினம் -

பல்கலைகள் கைவந்த
பண்பாடும் நல்லறிஞன்
சில்லையூர்ச் செல்வராசன்
சீரரங்கின்நாயகமாக
வல்லகவி நால்வரிங்கே
வீற்றிருக்க வாழ்த்துகிறேன்
வெல்லுபடி வேல்காக்க
நல்லவணக்கம் நல்லவைக்கே

பொற்காலம் வருமென்றே
புலவரெல்லாம் புகழ்ந்துபாட
நற்காலக் குறியொன்று
நலமா மலருமென்று
தற்காலம் தலையெடுக்கத்
தரணியிலே மரபுகாத்துச்
சொற்காத்த புலவரவர்
சுடரான மணியன்றோ.

செந்தமிழைச் சிந்திக்கும் செம்மையராய் வீற்றிருந்தே
வந்தபெரும் வண்கவிஞர் வாழியரே - சுந்தரமாய்
ஓங்குபுகழ் மண்டூர்ப் புலவர் மணிநினைவாய்ப்
பாங்காய்க் கவிசமைப்போம்.

சங்கம் தழைக்கத் தமிழாய்ந்த கூடலெனப்
பொங்கு நகர்கொழும்பும் போற்றிடவே - இங்கிதமாய்த்
தீந்தமிழ்ப் பாவலர் தீற்றும் கவியமுதை
மாந்துவோம் வாரீர் மகிழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்பாடும் வாவியெலாம் தேன்பாயு மட்டுநகர்
கான்பாயும் ஆறாய்க் கவிபாடும் - வான்புகழ்
மண்டூர்ப் புலவர் மணிபெரிய தம்பியவர்
தொண்டில் மணக்கும் தமிழ்.
சான்றோன் புலவர் மணிசாற்றும் பாவளத்தால்
ஈன்றநாடும் ஏற்றமிக எய்தியதால் - ஆன்றோரும்
வெண்பாவிற் கோர்பெரிய தம்பியெனப் போற்றினாரே
மண்டூர்க் கவிமுகில் கண்டு.

தெள்ளு தமிழின் சிறந்த புலவரவர்
உள்ளதும் நல்லதும் ஓதினாரே - உள்ளமதில்
ஊன்றும் ஒளியாய் உணர்விற் கலந்தாரெஞ்
ஞான்றும் நினைவோமே நாம்.

(வேறு)

உலகமெலா மெடுத்தோதும்
உயரியநற் தமிழினையே
அலகில்பல அறிஞரெலாம்
அறிந்துணரத் தலைப்பட்டார்
பலசுவையின் நயமறிந்து
பலபாடல் புனைந்துநின்றார்
நிலவுபுகழ் பெரியதம்பி
புலவர்மா மணியானார்.

தமிழே உயிரென்றார்
தரணியெலாம் புகழ்ந்துவர
அமிழ்தைக் கடைந்துதரும்
அரும்வெண்பா அமுதுதந்தார்
சிமிழில் படைத்தவாறாய்ப்
பிரான்கண்ணன் பெருங்கீதை
தமிழில் படைத்தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமத்தின் நெறிநின்றே.
வடக்கிலொரு மணியென்றால்
வணங்குமெம்பண் டிதமணியே
அடக்கமொடு அவர்புகழ்ந்த
அருமணியை அவனியறியும்
வடக்கினொடு கிழக்குமொன்றி
வளர்த்திடும் நயந்தநட்பில்
பெரும்புலவர் மணிவாழி.

மற்போரும் மலைந்தபெரும்
விறல்போரும் மறைந்துபோகச்
சொற்போரே தொழிலாகச்
சொல்லுமேரே உழுதுவர
நெற்போரும் நிலத்தினிலே
நிலைத்துநிற்க நிறைவாகக்
கற்போரும் கவியரங்கில்
கவிநயந்து களிப்பரன்றே.

இலங்கைமணித் திருநாடு
இனிய கீதம் இசைத்திட்ட
துலங்குகவி துயர்களையத்
துரிதகதி பலகாட்டி
விலங்குமனம் விலகிவிட
விடிவுகண்டு அவனியெலாம்
கலங்கரையில் விளக்கதாக

கனவினிலும் கரைகண்டாய்
வற்றாத கவியூற்று
வழுவின்றி பகர்ந்தனையே
முற்றாக இளங்கவிஞர்
முயன்றுநிற்க வழிசொன்னாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றேனும் இசைபிழைப்பின்
இயல்பின்று கவிக்கென்றாய்
சற்றேயும் வரம்பழித்துச்
சக்தியிலே விழுவீரோ
தேசிய மாகவியாய்த்
தேர்ந்தெடுக்க வேண்டாவோ
ஆசிய நாடுதாமும்
அண்டயல் நாடுகளும்
பேசிடவே செய்யாமோ?
பேர்புலவர் மாமணியின்
தேசிய நூறகவை
தேசமெலாம் போற்றிடவே.

பாட்டுக் கொருபுலவன்
பாரதியைப் பாரறிய
ஏட்டில் இளம்பியநல்
ஏற்றமிகு நற்புலவன்
கோட்டமில் யாழ்நூலோன்
கோன்விபு லானந்தர்
நாட்ட மிகுசீடனன்றோ
நாமும் நினைவோமே

நந்தா விளக்கனைய நாவலனே நானிலத்தில்
சிந்தா மணியே சிறந்த கவிமணியே
வந்தாய் கிழக்கும் வடக்கும் வணங்கியேத்த
எந்தாய் புலவரேறே என்றும் மறவோமே

கவியரங்கு, பொருள்: புலவர்மணி புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
96வது பிறந்தநாள் விழா 08.01.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி

**சிவநெறிச்செல்வர் சைவநன்மணி ஞானவாரிதி. இரா.மயில்வாகனம்**

வெண்பா

1. செந்தமிழ் நாட்டில் பெரியதம்பி எமைப்பிரிந்தார்
பைந்தமிழை விண்ணோர்கள் பயில்வதற்கோ - எந்தைஇவள்
சிவனடியே சிந்தித்து சிறப்புகளை மனத்திருத்தி
அவனடியை நினைப்போம் ஆய்ந்து.

2. மண்டூர்ந்து அன்னமலை சார்ந்து மழைபொழிந்து
கண்டூர்ந்து கயல்பாய்ந்து கன்னல்விழை - மண்டூரிலுறை
முருகனருள் பேறுபெற்று புலவர்மணி பெரியதம்பி
பெருமைதனை பேணலுற்றேன் யான்.

3. கண்டனொடு கவுத்தனும் சருகுபில்லி கருதரிய
கண்டப்பன் அத்தியாயன் வயித்தியென - மண்டலத்தில்
பண்டுமுறை தவறாத பொன்னாச்சி எழுகுடியில்
பண்டிதராய்ப் பணிபுரிந்தார் பயனாக.

4. தந்தைதாய் முதல்வராவர் வண்ணக்கர் சோமநாதர்
எந்தந்தை ஏகாம்பரம் தாய்தந்தை - சிந்தைமிகு
சிதம்பரப்பிள் ளைபுத்திரியாம் சின்னத்தங்கம் எனவாங்கு
கவுதலை கவுந்தங்குடி என்றறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுசீர் விருத்தம்

1) பவவருடம் இன்றுவரை நான்குகுறை நூறாகும்
வாழ்ந்தகாலம்
பெருவாழ்வு வனுபவித்தாய் பெயரும் பெற்றாய்
புலவர் மணிஎன்று
உரியதாய் பெற்றுநின்றாய் உழைப்பினால் தமிழ்மங்கை
தனைமணந்து வந்தாய்
பெரியதாய் பெரியதம்பிபெயர்வாழ பெரிதும்
உழைத்தாய் உறவாலே.

2) ஈரைந்து ஆண்டுதன்னில் திருச்செந்தூர் புராணம்
பாரதம் இவையாவும்
ஆராய்ந்து அறிவுபெற்று புராணத்தின் பொதிபொருளை
வெளியாக விளக்கி
ஆராதனைக் காலங்களில் அறிவுரைகள் கூறியே
அகலவைத்து இனிதாக
பாரதனில் பண்டிதராய் வருவதற்கு முதற்படியும்
பெற்று வந்தாயே.

3) மந்திரத்தை எந்தநேரம் ஓதும்போதும் மாண்பான
மரகத மடத்தை
சிந்தையில் வைத்து மட்டுவில் மகாலிங்கம்
ஏ. எம். கே. பேராசிரியர்
குமாரசுவாமி சந்தை என்றால் சாவகச்சேரி பீதாம்பரம்
பரமேஸ் கோணேஸ்
இசையாளர்களும் சிறிய தம்பி மயில்வாகனம்
இவர்களோடு பெரியதம்பியானோமே.

4) அருளா தொழியிலெனக் கார்துணை சொல்வாய்
குருவாய் அமர்கோவே
நந்தியைமுன் ஆண்டுகதி நல்குபர ஞானசிவன்
தந்தமுருகா கிருபைதந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவிதமா னாலும் முத லடிமுதலும் மூன்றாமடி
அருன்நந்தி வந்தவகை
தந்துவகை பொங்கிவர வைத்து மகிழ்வு
தந்துதவி செய்தாயே.

மட்டுவிலாம் பூங்கொடியில் மலர்ந்த மலர்
5) சாதிமலர் மலர்கள்தாழ
மட்டவீழ்ந்து மணங்கமழ்ந்த விலங்கு மலர்
மணவாளராய் வண்டுசூழ
தொட்டுண்ணும் இனியமலர் மகாலிங்க சிவமலர்
தொடர்பாய் பாசக்
கட்டறுத்துக் கருணைமலர் சிவபெருமான் கழல்மலர்
கீழ் உலகில் வாழ்ந்தாயே.

நல்லாய்கேள் நல்லார் செய்யுங் கேண்மை நாடோறும்
6) நன்மை தரும்
அல்லார் செயும் கேண்மை ஆகாதே ஆதலால்
காய்முற்றித் தீங்கனியாகும்
இளந்தளிர் நாள்போய்முற் றென்னாகும் என்றியம்பிய
சுவாமி வல்லார்
இளந்தமிழ் சிவப்பிர காசர் வாக்குக்கு
இசைவாக வாழ்ந்தாயே.

நல்லாரைக் காண்பதவும் நன்றேஅவ ரோடுஇணங்கி
7) இருப்பதுவும் நன்றென்றார்
அல்லாரைக் கண்ட அவதிபெற்று பணிபுரிந்து
பாழ்படாமல் நன்குணர்ந்து
பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதி என்றும்
சோமசுந்தரம் பொன்னம்பலம்
கண்டுஇவர் களோடு சேர்ந்து வாழ்ந்த
புலவர்மணி ஆனாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) உய்வதற்கு தமிழன்னை உண்டுஎன்று உறுதி
கொண்டு வந்தாய்
செய்கருமம் திருந்தவே செய்துவாழும் தீரம்
திணிவான வேலைவளம்
வையத்து வாழ்தமிழர் மலர்ந்து வாழ்வார்
என்றும் துணிவெண்ணம்
தெய்வத்தின் அருளாய் செல்வத்தின் செல்வப்பெயர்
புலவர்மணி யானாயே

9) சாஸ்திரம் பார்த்து சந்ததியை வழிப்படுத்திய
சகா தேவனும் இங்கில்லை
சூஸ்திரத்தால் பொருள்கூறி தொல்லை நீக்கிய
தொல்காப்பியரு மிங்கில்லை
சும்மாயிருந்த சங்கையூதி சந்ததியைக் கெடுத்த
சாமிநாதரு மிங்கில்லை
அம்மாபிழை என்றறிவுறுத்திய புலவர்மணியுமில்லை
அறிந்ததையே அறைந்தேனே.

புலவர்மணியின் 96வது பிறந்த நாள் விழா - 08.01.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுநகர் தந்த மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை

- ஈழபாரதி மருதூர்வாணர் -

மட்டுநகர் தந்தமணி மதிப்புமிகு பெரும்புலவர்
மகிழ்வதனில் பெரியதம்பிப் புலவர்மணி எங்களையும்
இட்டமுடன் நேசித்தவன், ஆமுசரிபுத் தீனோடுநண்பர்
இலக்கியத்தின் சார்புமத கலாச்சாரம் பல்லோர்களும்
தொட்டுக் கூட நண்பர்களாய் தொடரவந்த காலங்களில்
தொல்காப்பியர், வள்ளுவனார், கம்பர், உமர் இன்னும்பல
எட்டுத்திற்கும் புலவர்களை எங்களுக்குத் தொட்டுக்காட்டினாரே
ஏபெரிய தம்பிப்பிள்ளை என்போம் மறுப்பாருண்டோ.

நினைவிருக்கே ஐம்பத்தாறில் நீலவாணன் அண்ணருடன்
நீளச் சட்டை, வேட்டிசால்வை யணிந்தபுலவர் மணிஐயாவும்
தனையளைத்தே புலவர் ஆமுசரிபுத் தின்மாமா மெயின் வீட்டிலே
தமிழ்க்கவிஞர் எழுத்தாளர் தலைமைதாங்கிக் கூட்டத்திலே
மனமுவந்து பாவினங்கள் மரபுவழிக் கவியாப்புகள்
மருதமுனை, கல்முனையின் பிரதேசத்தவரை நெறிப்படுத்தினார்.
நினைவிரிக்கே. பெரியதம்பிப் பிள்ளையுடன் சரிபுத்தீனும்...
நீலாவணன், ஜீவா, பாண்டியூரான் நானும்சம காலத்தவரே

மாபெரிய சாகித்தியவிழா கல்முனை சாகிறாக் கல்லூ ரியிலே
மட்டுநகர் தந்தமணி (கள்) எழுபத்தி நான்காமாண்டினிலே
மாபெரிய பாவரங்கில் மரபுநிலை வளம்பெறவே....
மணிமணியாய் வெண்பா, விருத்தப்பா அகவலிலும்...
மாபெரிய கைலாசபதி, தலைமையிலே கருத்தரங்கினிலும்
மறந்திலமே, லஷ்மணஐயர் , பொன்னுத்துரை, அன்புமணி.
மாபெரிய இளங்கீரன், டொமினிக்ஜீவா - இன்னும் பலர்
மதிமயங்கச் செய்யுள்களால் மரபுவழி மொழிந்தனரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்தோலை இன்றிரவல் குலமரபை வெறுத்தெழும்
குஞ்சிகட்குத் தெரியுமாமோ? குரிசில்கள் மணிஐயாக்களை?
குருக்கள் மடம் ஊர்போனால் குருசில்கவி மணிஐயாவிடம்
குதூ கலித்து மரபுக்கலை குறைதெளியப் பயின்றவர்நாம்
விருத்தப்பாவே என்னவிலை என்று கேட்கும் விசனர்கட்கும்
வியூகஞ்செய்து முதியோர்களை விஷமம்பேசும் சில்லறைகள்
கருத்துக்களை முதியோரிடம் கேட்டுக்கற்றோம்; கவிஞரானோர்;
கல்லாதோர், "கரடுமுரடு" கன்னிமரபைக் கெடுக்கின்றனரே!

தினகரனில், சுதந்திரனில், தினபதிசிந்தா மணிவீரகேசரியில்
திகழ்மரபுத் தேன்கவிகள் தீட்டினார்கள், கீதைநெறிகள்,
மனதுகளில் கசடறுத்தும் மனிதகுலம் மேன்மைபெற
மட்டுநகர் தந்தமணி பெரியதம்பிப் பிள்ளைஐயா -
மணிக்குரலில், வானொலியில் மனங்கனிந்து பலபாடியவர்
மட்டுநகர் மாதாமீன் பாடுந்தேன் மகிமையெல்லாம்
கணப்பொழுதும் நினைக்கையிலே கணிரென்று ஒலிக்கின்றன
கவிஞரையா, கலைஞரையா சகலகலா வல்லவர்மணயே!

கவிதையாக்கத் தெரிந்தில்லாக் காளையர்கும் புலவர்மணி (கள்)
கண்களினைப் போல்விளக்கி கவிதையாப்பு வெண்பாவிலே
கவிதை எங்கள் கட்டுபவை காட்டுகின்றார் காணுங்களே...
"மாத்திரையில் நின்றும் வளருமிசை யவ்விசையால்
நாத்திருந்தும் செய்யுள் நடக்குமே - சாற்றின்
ஒருமாத்திரை தப்பின் ஓசைகெடும், பாட்டும்
உருமாற்றம் பெற்றொழியும்"
கண்டீர்களா? தடங்காமலே சுவைதரவும், நேரிசைகள்...
செந்தமிழில் செப்பினார்கள் வெண்பாவினைச் சிறப்புக்களை
நவின்றவரின் நாச்சுவைக்கும்; கீதை பல படைப்புக்களை
நவில்வதெனில் நாளெமக்குப் போதுமாமோ நேசர்களே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமதங்கள் ஐக்கியத்தை இனிமையுறப் புலவர்மணி
இயற்றித்தந்த பலகவிகள், அவையிற்சில காணுவம்மோ...
"அகில உலகிற்கும் ஆன்மிக வாழ்வும்
இகவாழ்வும் நல்கும் இனிய - புகலாகும்
நம்பிநபி நாயகனார் நன்மொழிக ளம்மொழிகள்
நம்பினார் சேர்வார் நலம்"
மனமிகவும் மகிழ்ந்திடவே பொழிந்தவரே புலவர்மணி
மனிதரிடை நெருங்கியவர் பாடியவர் மனந்திறந்தே...
மனமுவந்து புகழாமலும் மறந்துயரங்கள் வாழலாமோ?
மனிதரிப் போ நம்முடைய மண்டையுடை காலமிப்போ...
இனவுறவைப் புலவர்மணி இயற்றிவாழ்ந்தும் காட்டியமை...
இதயமுள்ள மரபினர்கள், ஏபெரியதம்பிப் பிள்ளையாம்மே!

சான்றோராம் புலவர்மணிகள் சரிபுத்தீன், பெரியதம்பி
சாத்விகராம் ஒழுக்கநெறிச் செம்மல்களாய் வழிகாட்டினர்.
சான்றுகளாய் நாம்சிலபேர் சென்றகாலம் அவர்வழிகள்...
சாற்றுகவி பாடுகின்றோம், சார்மரபும், சமாதானமும்....
கான்போர்களாம்...வழிபிசகிப் போகமாட்டோம் காருண்யவழி
காட்டித்தந்த சிலர்வழி கடைபிடித்தோர் சுவனம்போவம்...
வீண்போர்கள்.. இனப்பகைமை விதண்டாவாதம் பேசுவோர்கள்
வீணாகியும் விரைந்தழிவர்; வியூகித்து நாம் வாழ்வோமே!

1998 - 10 - 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி என்றோர் புயல்

- மண்டூர் தேசிகன் -

1. திமிலைத் துமிலர் சிறப்பால் வெண்பாவரங்க
அமிழ்தத் தேன் உண்ணும் அவையோர்க்கும் - தமிழினிய
புலமைத் தலைமைப் பொழிற்சுடரே என்கவிதை
இலகு தமிழ் பேசும் இனி.

2. ஈழத் திலக்கியத்தில் என்றும் தனித்துவமாய்
வாழத் தமிழ்படைத்த மண்டூரான் - ஆழ
ஞானத் தமிழ்க் கவிதை நாயகனைப் போற்றி
காணத் தமிழ் புகலல் காண்.

3. மூங்கில் நதிபாய்ந்து மோதிமுத்து நீரூட்டி
ஓங்கிப் பெரியதம்பி உத்தமனின் - பாங்கிசைக்க
சிரந்தாழ்த்தி நெல்மணிகள் சேர்நதசையும் மண்டூர் மண்
வரம்பெல்லாம் பொன்னாங்கண்ணி.

4. வாரிக் களவட்டி நெற்குவை மாட்டேறிச்
சூரியனும் போய் மறையும் தொல் மண்டூர் - பாரில்
உயர்ந் தொளிரும் உள்ளதுவும் நல்லதுவும் ஓதும்
நயம் பெரியதம்பி நடை.

5. ஞானமணி எங்கள் நறுந்தமிழில் சோதிமணி
வானமதியாய் எங்கும் வாழுமணி - ஊனமிலா
கீதைத் தமிழ் தேன் பிழிந்தூட்டிக் கண்ணனுக்குச்
சோதிமணி யானார் தொடர்ந்து

6. மட்டுநகர் நாட்டு மகுடம் தலைசூடி
முட்டவந்த சாதித் திமிர் மடக்கி - கொட்டம்
அடக்கிச் சமத்துவத்தை அன்றே வளர்த்து
வடக்கிலும் வென்றார் மணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஊருக் கென் செய்தார் உனக்கேதும் செய்தாரா
பேருக்கேன் சிலை என்ற பேச்சு - மேடு
மலைகண்டு நாய்குரைத்தல் போலன்றோ வாழும்
கலை கண்டோம் வைத்தோம் கனி

8. தேசியத்துச் சின்னம் செறி சுவைக்கு வெல்லம்
பேசி முடியாப் பெருந் தகமை - வீசிக்
கலக்கி அடித்துக் கயமை அழித்ததே
புலவர் மணி யென்றோர் புயல்.

9. கிழக்கிலங்கை மண்ணில் கிளரும் கருமுகிலாய்
முழக்கித் தமிழ் முரச மார்த்தே - உழக்கி
இலக்கியத் தேன் வண்டாய் இனியதமிழில் விதைத்த
புலவர்மணி யென்னும் புயல்.

10. உள்ளதுவும் நல்லதுவும் உரைத்தவாய் நம்மூர்வாய்
வெள்ளமாய் வெண்பா பெருக்கியவாய் - கள்ளமிலா
புலவர்மணி பெரியதம்பியது வாயன்றோ.
உலக நெறி கீதை உணர்.

11. வேதத்தின் ஊற்றாய் விளங்குகின்ற தெய்வ
போதனைக்குள் 'சாதிப்' பொடிவைத்த - பேதத்தை
சுட்டெரிக் கச் சிலுவை சுமந்தார் பசுமலையில்
கட்டறுத்துப் பாயுங் கவி.

12. இன மதத்தைத் தூண்டி இலாபத்தில் கண்வைக்கும்
மனமிருண்ட மாந்தர் குலத்தின் - கனிவற்ற
பலமழித்து ஈனப்பகை முறித்து வீசியதே
புலவர்மணி என்றோர் புயல்

13. ஊறுகின்ற வெந்நீர் உறலுள் சமத்துவத்தை
வீறு நடையாக விளக்கும் - தேறுதமிழ்க்
கன்னியாப் பேர்க் கவிதை அத்தனையும் தர்மத்தழிழின்
சென்னியெனத் தேறுமதைச் செப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பாலைக்கவி படைத்துப் பாராட்டுப் பெற்றான்
காலைக் கதிராய்க் கவிஞர் - சோலைக்
குயில்களெல்லாம் கொண்டாடிக் கூவிக்களிக்குதே
துயிலாப் பெரியதம்பிச் சொல்.

15. காந்தீயக் கொள்கை கருத்துக் கவர்ந்திழுக்க
சாந்தி சமாதான சன்மார்க்க - வேந்தாய்
பாட்டினால் தேசிய ஒற்றுமையை ஊட்டிக்
காட்டினார் வல்ல கவி.

16. வித்தகன் எங்கள் விபுலானந்தத் துறவி
சித்தப்படியே தமிழ்வளர்ந்த - உத்தமன்
உரைத்த நெறி வேதாந்த தத்துவமாம் தெய்வநெறி.
துரைத் தனத்துக் கேற்ற துணை.

17. தேசிய ஒற்றுமையை சிதைக்கும் சிறுகும்பல்
ஆசியாக் கண்டம் விட்டகன் றோடக் - காசில்
இலக்கியமாய் வீசி இடித்தடித்த தேயாம்
புலவர் மணி என்றோர் புயல்.

18. சாதி வரம்புச் சாக்கடைக்குள் தாய்த் தமிழை
நாதியற்ற மூடர் நலித்தடைக்க - மோதி
உடைத்தும் சிறை மீட்டு உண்மை விளக்கிற்றே
மடை திறந்த ஞாலக் கவி.

19. பகவத்துக் கீதையைப் வைந்தமிழிற் பாடினார்
மகிமை பெறு பெரியதம்பி - நிகரிலா
வெண்பாப் புகழேந்தி என்ற சொலும் வீழ்ந்ததே
வெண்பாப் புலவர் மணியால்.

மண்டூரில் நடைபெற்ற புலவர்மணி நூற்றாண்டு வெண்பாக் கவியரங்கில் பாடப்பட்டது.

- 22.08.1998 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி என்றோர் புயல்

- மண்டூர் அசோகா -

1. மண்டூராம் அன்னை மகிழ்ந்தீன்ற நற்புதல்வன்
கண்டோர் உவக்கும் கவிவாணன் - தொண்டன்
பெரியதம்பிப்பிள்ளை யெனும் பேராளன் எங்கள்
அருந் தவத்தால் பெற்ற அணி.

2. தலைவனாம் மண்டூரின் சற்புதல்வன்
நிலை உயர்த்த வந்த நிமிர் புகழோன் - குலையா
வரை நிகர்த்தோன் வண்பணிகள் மான்புயர ஆற்றும்
கரை நிகரில் ஆழக் கடல்

3. மூங்கில் நதியோடும் முத்தாய் வயல் விளையும்
தேன் கதலி தென்னை பலா ஓங்கும் - தீங்கில்லாக்
கீரை விளையும் கிளா பொன் வளம் கொழிக்கும்
நேரிலிதற்கேது நிகர்.

4. எங்கும் பசுமை எழில் விரிப்பு யாவர்க்கும்
பொங்கும் மனம் தன்னில் பூரிப்பு - கந்தன்
குடியிருப்பு ஆனதனால் குஞ்சுகளும் தம்தாய்
மடியினிலே பாடும் தமிழ்.

5. இந்தச் செழிப்பிற்றான் எங்கள் பெரியதம்பி
வந்து தித்தார் செந்தமிழ்த்தாய் மான்புறவே - எங்களது
மட்டக்களப் பன்னை வானுயர யாழ்நூலைத்
தொட்டளித்தோன் பாதம் தொழ.

6. மட்டு நறும் பொன்னாள் மங்காப் புகழ் விளங்க
தொட்ட கலை யாவும் தூய்மையிற் - பட்டொளிர
எட்டுத்திசையும் இலங்கி நிற்கப் பைந்தமிழைக்
கட்டி அணைத்தார் கவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எழுவான் கரையினிலோர் எல்லாள னாயுதித்த
மயில் வாகனர்க்குப் பின் வண்ணத் - தமிழ் வளர்க்கத்
தண்ணிலவாய்த் தோன்றித் தகைசால் பணியாற்றி
அண்ணல் பொலிவானார் அறி.

8. பாரதப் போர் வெறுத்த பார்த்தனுக்குக் கண்ணபிரான்
யார்த்தளித்த கீதைக் கடல் குளித்துச் சேர்த்தமுத்துக்
கோவையாய்க் கீதையைக் கொண்டுதந்தார் வானகத்து
ஓவியமாய் ஆனார் உயர்ந்து

9. வெண்பா பெரியதம்பி என்று புகழ் விளங்க
தன்பாத் திறத்தாற் றழைத்தவர் காண் - பண்பார்ந்த
வள்ளல் பெருமை யெலாம் வண்டமிழில் சொல்ல
உள்ளதுவோ என்நற் குரம்.

10. கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை காட்சிகளை
கற்றறியாதோருக்கு கற்றிடவே - கட்டுரையாய்
பத்திரிகை மூலம் பயனுறவே யாத்தளித்த
புத்தியினை நெஞ்சே புகல்.

11. தண்டமிழ்தாய் தாள்களிலே தாழ்ந்து விளையாடி
பண்பட்ட வித்தகனாய் பார்த்த தெலாம் - விண்டுரைத்து
உள்ளதுவும் நல்லதுமாய் உரைத்ததற்குச் சாகித்திய
மண்டலத்திற் பெற்றனர் காண் மாண்பு.

12. சாதி யரக்கன் தலைகுனிய மாந்தரெலாம்
தேகநிலை யாலே சிறப்பொப்பார் - மேதகவால்
ஏகமென்ற கொள்கை எடுத்தியம்பித் தீண்டாமைப்
பேய் விரட்டிப் பெற்றனரே பேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இழிகுலத்தோன் என்று எவரும் ஒதுக்கிவைத்த
அறுமுகத்தான் தன்னில் அன்பு வைத்து - உறுயாழ்மண்
அழிவு தரும் தீண்டா அரக்கனுக்கோர் சாட்டைப்
பொழிவு தந்தார் இந்தப் புயல்.

14. செந்தூர்ப் புராணத் திகழுதமிழ்ப் பாட்டிசைத்து
பந்தம் தவிர்க்கும் பயனுரைத்து - அந்தருது
பத்தினிலே வேலன்தாழ் பற்றியதால் ஈழத்தில்
நித்தியமா யானார் நிலை.

15. தில்லை உறையும் திருவேலன் - வல்லபுகழ்
சொல்லில் கடைந்து சுவைகண்டு - நல்ல
மண்டூர்ப் பதிகமெனத் தந்தனரே நல்லமுதக்
கண்டுச் சுவை விஞ்சும் காண்.

16. குலம் சிறக்க வந்த குரவனவன் மட்டுநகர் தலத்தே
நிலம் சிறக்க வந்த நிதிப்பலமாம் - தலத்தே
பலம் பெருக்க வந்த பனுவலோன் நம் கோன்
புலவர்மணி என்ற புயல்

மண்டூரில் நடைபெற்ற புலவர்மணி நூற்றாண்டு வெண்பாக் கவியரங்கில் பாடப்பட்டது.

- 22.08.1998 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி என்றோர் புயல்

**- அன்பு முகைதீன் -**

1. மட்டக்களப்பின் மகிமையினை வித்துவத்தை
எட்டுத்திசைகளிலும் ஏத்திவைத்து - திட்டமதாய்
மண்ணுக்குப் புகழ் சேர்த்த மைந்தன் பெரியதம்பி
முன்னணியில் நிற்க்கும் முனி.

2. மண்டூர் இதன்றும் மகத்தான மண் என்று
விண்டுரைக்கச் சக்தியில்லா வேளையிலே - அன்று தொட்டு
பாட்டிலே அப்பதியின் பண்பான பாங்கதனைத்
தீட்டி வைத்தார் என்னே திறன்.

3. பண்டிதனாய் நன்றாகப் பண்பட்ட நன்மகனாய்
கண்டோமே இந்தக் கணவானை - அன்று முதல்
வெண்பாவைத் தன்னுடைய வித்துவத்தின் ஆயுதமாய்
கொண்டவர் தான் இந்தக்குயில்.

4. கன்னித் தமிழைக் கற்ககண்டாய் எங்களுக்கு
உண்ணுதற்குத் தந்த ஒருவர்தான் - எண்ணத்தில்
இன்றும் இறவாமல் எங்களுக்குள் வாழ்கின்ற
மன்னர் புலவர் மணி.

5. அந்நியர்கள் பின்னாலே அள்ளுண்டார் மாந்தரெல்லாம்
புண்ணியவான் கண்டு புழுங்கினார் - தன்னுடைய
பாட்டாலே இத்திமிரைப் பண்படுத்த எண்ணியதால்
தீட்டினரே செம்பாத் தினம்.

6. பகவத்துக் கீதையைப் பல்லினத்து மாந்தருமே
அகமுருகிக் கற்றுணரும் ஆவலால் - பகவனது
வார்த்தையைச் செந்தமிழினில் வார்த்தெடுத்து தேன்குழைத்து
ஊட்டினரே பெற்றோர் உயிர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அன்பு வழி நின்று அறவழியில் நாம் உழைத்தால்
என்றும் சிறப்புண்டு என்பதனை - தன்னுடைய
எண்ணத்தில் கொண்டு இறுதி வரை வாழ்ந்தவர் தான்
அண்ணல் பெரியதம்பி ஆம்.

8. தீண்டாமை என்ற பெரும் தீங்கங்கு மூண்டதனால்
மாண்டவர்கள் சின்ன மனிதரெலாம் - ஆண்டவனின்
பிள்ளை அவர்களெனப் பேச்சரங்க மேடைகளில்
துள்ளி முழக் கிட்டதுயார் சொல்.

9. சாதி மத பேதத்தால் சண்டைகளே மூண்டதனை
நீதியில்லை என்றெடுத்து நிச்சயமாய் - ஓதியே
எல்லோரும் சோதரர்கள் இந்நாட்டு மன்னரென்று
சொன்னவர்தான் இந்தச் சுடர்.

10. இந்து முஸ்லிம் ஒற்றுமையை என்றுமே இந்நாட்டில்
சிந்தையிலே எண்ணியதை சீராக்க - என்றென்றும்
உள்ள விருப்புடனே ஓங்கி நிதம் சூழுரைத்து
வெள்ளமெனப் பாய்ந்தார் விரைந்து.

11. மட்டு தமிழ் முஸ்லிம் மக்களையே நம்புலவன்
ஒப்பிட்டுச் சொன்ன உவமானம் - இப்போதும்
காதுகளில் வந்து கணீரென் றொலிக்கிறது
ஓதுகிறேன் கேட்டு உணர்.

12. இருதயத்தின் ஈரிதழ்போல் இந்து முஸ்லிம்யாம்
ஒரு வயிற்றுப் பிள்ளைகள் போல் உள்ளோம் - அரசியலில்
பேராசை கொண்டோர் பிரித்து நமை வேறாக்கி
ஆராயா செய்வார் அழிவு.

மண்டூரில் நடைபெற்ற புலவர்மணி நூற்றாண்டு வெண்பாக் கவியரங்கில் பாடப்பட்டது.

- 22.08.1998 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவ(ர்)மணி வெண்பா

**- கவிஞர் திமிலைத்துமிலன் -**

முத்தமிழாய் என்முன் முகிழந்த கலையணங்கே
சிந்தம் நிறைந்தொளிரும் திவ்வியமே - இரத்தினத்தே
வெண்பாக் கவியரங்கின் விழுமம் பொலிவுதர
கண்பார்த்தல் நின்றன் கடன்.

மண்டூரின் வாழ்வாய் வயங்கும் திருமுருகைக்
கொண்டுருகும் காலே குறைவிலகும் - கண்டூரும்
செந்தமிழ்ப்பா பூக்கும் திசையனைத்தும் கந்தமெழும்
அந்தமில தன்னான் அருள்.

மண்டூரென் றோத வாய்மணக்கும் செந்தமிழின்
பண்டூரும் இன்பப் பயன்மணக்கும் - வண்டூரும்
இளமலர்க்கா நீழல் இரும்மணலில் நண்டூர்ந்து
பழமரத்தே ஏறும் பதி.

மண்டூர்ப் பழம்பதியில் வந்துதிக்க நற்புதல்வன்
தொண்டிற் பெரியதம்பிச் சொற்குரவோன் - தண்டமிழில்
வல்லோனின் நூற்றாண்டில் மலருகின்ற இவ்விழாவிற்(கு)
எல்லோரும் வந்தீர் இனிது.

புலவ(ர்)மணி யென்றோர் புயல்என்ற பொன்குடம்
உலவவரு கின்ற உயரரங்கில் - குலவவரு
செஞ்சொற்பா வென்ற தேனுகர வந்தோர்க்கெம்
அஞ்சலிகள் கொஞ்சும் அளி

மண்ரூர்க் கலையிலக்ய மாண்புடைய பேரவையீர்
கண்டீர் எனையிக் கவியரங்கில் - கொண்டாடித்
தலைமைக் கவியாய் தயையீந்த நன்றிக்கென்
தலைதாழ்து நிற்கும் தனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழைத் தேனிற் குழைத்துச் செழும்அமுத
விந்தைக் கவிதாயே வீற்றிருக்கும் - அந்தமிலாப்
பாவலரே என்றன் பணிவான நல்வணக்கம்
ஏவல்யான் உங்கட் கினி.

கவிநுகர வந்திருக்கும் காளையரே கன்னியரே
செவிநுகர வந்திருக்கும் செம்மல்களே - அவிசொரியும்
வேள்வியினைக் காண வீற்றிருக்கும் சான்றோரே
தோள் கொடுப்போம் வாரீர் சுமந்து.

ஐயர் கவிஞர் அரங்கேற்ற நிற்கின்றார்
வையம் இவர்க்கு மலர்தூவும் - பொய்யல்ல
பூமாரி யல்ல பொன்மாரி நீர்தூவி
மாமரி பெய்வீர் மகிழ்ந்து.

அன்பு முகையதீன் ஆம்கானா நல்லரத்தினம்
பொன்சிவா னந்தன் பூவனைய - பெண்கவிஞர்
மண்டூர் அசோகா வளரும் இளங்கவியாய்க்
கண்டுகொண்ட தேசிகனே காண்.
புலவ(ர்)மணி யென்றோர் புயல்இந்தப் பொன்மொழியில்
நிலவும் புயலுக்கே நேர்கருத்து - உலவுகடுங்
காற்று மழைமேகம் கதித்தெழுதீ விரமெனவும்
ஏற்றுக் கொளலாம் எனில்...

பெரியதம்பிப் பிள்ளை பிரமன்வெண் பாவிலன்றி
எரிதழலாய் நின்றோன் அரசியலில் - பரகசியம்
ஆனதனால் எங்கள் அறிஞன் புலவ(ர்)மணி
வானகத்தைப் பிய்க்கும் மழை.

அரசியலார் மேடைகளில் அவன்புயலாய் நின்றடித்து
முரசியம்ப வைத்த முழக்கங்கள் - உரிமைபெற
தீவிரமாய் நின்று செயற்பட்ட கட்டங்கள்
போய்விடுவ தில்லைப் புறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருக்கொண்ட மேகம் கடலில்மட்டும் பெய்வதில்லை
பொருக்கு வெடித்த புவித்தரையில் - உருக்குலைக்கும்
செம்புலத்து நீராய்ச் செறியும் பெரியதம்பி
அம்புவிக்குக் கார்முகிலே யாம்.

வானம் பெயலாய் வருஷித்த நம்புலவன்
ஆனநலம் எங்கள் அவனிக்காம் - மானமொரு
வாழ்வாங்கு வாழ வகைதந்த பாவலனின்
ஆம்புலமை எங்கட் கணி.

மண்டூரில் நடைபெற்ற புலவர்மணி நூற்றாண்டு வெண்பாக் கவியரங்கில் தலைமை வகித்துப் பாடிய கவிதை - 22.08.1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி என்றோர் புயல்

- பொன் சிவானந்தன் -

1. புலவர்மணியென்றோர் புயல் மகிட மிட்டுத்
தலைப்பினிலே வெண்பா அரங்கை - தலைமேல்
கனிச் சீர் விரவிவரா ஈற்றடியை நாட்டி
இனிச் செய்வோம் வெண்பா அரங்கு

2. ஓமென்றுருத் தீட்டி ஓசையினால் தேன்வாவி
காம்போதி பாடச் சரவணனும் - காம்பொதிக்கிச்
செந்தமிழுக் காரமிடும் சேயாய்ப் பெரியதம்பி
வந்தெழுவும் மண்டூர் மண் வரப்பு.

3. புலவர்மணி கண்ட புலமைக்குள் பாஷை
எளிமை இனிமை தெளிவின் - செம்மையால்
பாவாறு பாயப் படித்தோம் அழகியலை
நாவிளையப் பாடினோம் நாம்.

4. கூமாவடி நிழலில் கூடார ஆலையின் கீழ்
பாமரர்க்கும் பாட்டெழுப்பும் சூழலிலே - தேமதுரத்
தென்றல் வருடத் திளைத்த புலவர்மணி
என்று புயலானார் இயம்பு.

5. தீர்த்தக் கரை வம்மிப் பொந்தில் வசித்த வணில்
நேர்த்தியாய் வாழ்ந்த வெறுமையைப் - பார்த்த
புலவமணி உள்ளுணர்வின் பக்குவம்தான் கீதை
அலை பாய்ந்த வெண்பா அறி

6. இலங்கை மணித்திருநா டெங்கள் நாடென்று
நிலப்பற்று ஊட்டுகின்ற பாட்டை - நிலமற்று
நாமலையு மிவ்வேளை நின்றால் புலவமணி
தாம் புயலாய் சீறிநிற்கக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. யாப்பியலில் மெய்போல் மதிப்பிலென் வாழ்விலென
ஒப்பிட்டுத் தன்னை இனங்காட்டி - தெப்பமாய்
ஞானம், இசை, படிமம், உத்தியொடு சீலத்தைக்
காணத் துடுப் பெடுத்தார் காண்.

8. ஐயனார்டிக் குளுமை ஆலயமுகப் பில்விழ
பைய வழுக்கி அதிலமர்ந்து - கையில்
எழுதுகோல் தாள் கொண்டு இருப்பியலைத் தொட்டார்
பழுதவரை புயலென்ற பண்பு.

9. ஒருமாத்திரை கெடின் பாட்டு உருமாறும்
வருமிசை செத்துவிடு மென்று - பொருந்த
இலக்கணத்தைத் தின்றோன் இதயத்தின் மூச்சு
பலகற்றுச் செருக்கழித்தார் பாடு.

10. தளை பிழைத்த வெண்பாவும் சொன்னேன் கருத்தின்
தலை பிழைத்து வந்துமிருக்கும் - வளைவுக்குள்
நல்லவற்றை ஏற்று நன்றி சொல்க தீயன
இல்லா தொழிக இடர்.

11. என்னையுமிப் பாவரங்கில் பாட அழைத்தோரின்
முன்னேற்றங் கண்ட முயற்சியிவை - இன்னுமின்னும்
எங்கள் கலையின் எழுச்சிக்கும் சான்றோரின்
ஆசிக்கும் ஆளாக! நன்று.

மண்டூரில் நடைபெற்ற புலவர்மணி நூற்றாண்டு வெண்பாக் கவியரங்கில் பாடப்பட்டது.

- 22.08.1998 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தந்த புலவர்மணி

## மு.கணபதிப்பிள்ளை "முனாக்கானா"

மீனான உயிரினம் ஏழான சுரமுடன்
மிகநல்ல இசைகளார்ப்ப
ஆனாவுந் தெரியாத ஔவைகளு மிதுகேட்டு
அவமானந் தாங்காமலே
தேனான கவிபாடும் செந்தமிழர் மண்ணிலே
திருநிறை மண் டூரளித்த
ஆனான வித்துவான் பெரியதம் பிப்பிள்ளை
அமரனை மறக்கலாமோ?

முத்தமிழ னாந்துறவி முதன்மையுறு யாழ்நூலை
முன்தந்த விபுலாநந்தன்
இத்தரையி லீட்டிய இனியதமிழ் மூன்றையும்
இவன்பேரி லுறுதியெழுதி
வைத்துவிட் டேசென்ற செல்வங்கள் யாவையும்
வட்டியும் முதலுமாக
வித்தகன் புலவர்மணி இளைஞர்க்கு இவையீந்து
விண்ணுலகில் சோதியானார்.

வண்ணக்கர் பரம்பரையில் வந்தாலு மதிகார
வல்லாசை இவருக்கில்லை
எண்ணற்ற தலங்கண்டு பதிகங்கள் பாடினும்
இவர்க்கு மதவெறியுமில்லை
பண்ணையார் போல் செல்வ மிருந்தாலும் புலவர்க்கு
பணத்திமிர் பிடித்ததில்லை
விண்ணுலகு போம்வரை விரதமாய் இவைகாத்து
பீஷ்மராய் வாழ்ந்துவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யிலே வெண்ணுடை விழியிலே தண்ணளி
மெல்லிய புன்னகை வதனமும்
கையிலே குடையுடன் பையிலே நூலுடன்
காலிலே செருப்புமாட்டி
பையமென் நடைகொண்டு வருவதைக் கண்டவர்
வழிவிட்டுக் கைகூப்பினால்
ஐயனாம் புலவர்மணி இவர்தா னெனக்கண்டு
அறியாரும் அறிந்து கொள்வார்

பண்டிதர்கள் மணியான கணபதிப் பிள்ளையுடன்
பாவலன் பெரியதம்பி
கொண்டதொரு நட்பினால் இரட்டையர்க ளாகவே
கூடியே தமிழைஆய்ந்தார்
வண்டுமலர் உறவுபோல் அங்குதமி ழறிஞரில்
வதையோடு தேனைஎடுத்து
கொண்டோடி வந்தெமது உளநோய்க ளனைத்துக்கும்
குணங்கண்ட பரிகாரியாம்

எண்ணரிய பதிகங்கள் பாடியே நால்வருடன்
இவருமொரு குரவரானார்
கண்ணனது கீதையை வெண்பாவில் பாடியே
கனிட்டபுக ழேந்தியானார்
அண்ணல்மீட் சிப்பத்தை அணிசந்த முடன்பாடி
அருணகிரி நாதரானார்
பண்டைநல் நூலாய்ந்து பலவுரைகள் செய்துமே
பரிமேல் அழகரானார்.

இலக்கண மிலக்கியம் இதிகாச புராணங்கள்
இனியபல சங்கநூல்கள்
நிலைத்ததொரு பஞ்சமா காப்பியம் ஆனஇவை
நெஞ்சிலே நிறைந்திருந்தும்
தலைக்கனம் இல்லாதவன் தமிழுரும் ஊருணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலர்க்குந் தந்தவள்ளல்
கலக்கமறப் பொருள்கூறும் ஆசிரியன் வெண்போலே
காசினியில் கண்டதுண்டோ?
மழையது பொழிந்தன்ன கவிமழை பொழிந்தவன்
மண்ணுதமிழ் பயிர்கள்வளர
பழையதை மறக்காத பண்பாளன் புதுமைக்கும்
பகைமையது காட்டாதவன்
இளையவரும் இன்றைக்கு எம்புலவர் மணியென்று
இறுமாப்புக் கொள்ளுமாறு
தமிழனென உணர்விலும் செயலிலும் பேச்சிலும்
தளராது வாழ்ந்த தமிழன்.

உள்ளதும் நல்லதும் ஒருபாலைக் கவியிஎன
உரைநூ லுரைத்தளித்தோன்
வெள்ளை மலராள்வாணி சரஸ்வதி கலம்பகம்
மேடை நாடகமாய்த் தந்தோன்
மெள்ளவரு மோடைநீ ரதுபோன்று தமிழிலே
மேடையில் பேசிநின்றோன்
தள்ளாத வயதென்று சொல்லாத உணர்வுடன்
தமிழீந்த பாரி இவனே.

துய்யசிவன் சடைமீதில் ஓராது மட்டுமே
சுரந்தோடும் எங்கள் புலவன்
மெய்யிலே மூன்றாவது தமிழாகப் பாய்ந்துமே
மேலான விளைச்சல்காட்டும்
கையிலே எழுத்தாறு கருத்திலே உணர்வாறு
கவிமணியின் தமிழ்வாயிலே
உய்யவழி காட்டிடுஞ் சொல்லாறு பெருகியே
உயிரான தமிழை வளர்க்கும்

அங்கங்கள் தோறுநம் தமிழ்த்தாய்க்கு பாமாலை
அணிந்துமே அழகுபார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களது புலவர்மணி வாழ்ந்ததோர் காலத்தில்
எம்பாண்டி மன்னரிருந்தால்
மங்களம் பெண்பாட மணிமுரசு கொட்டிவர
மத்தகம் மீதிலேற்றி
எங்கணும் வீதிகளில் இனியஉலா செய்குவர்
எவருமே இன்றுஇல்லை.
பொன்குலகு வாழ்கின்ற புனிதவிபு லாநந்தன்
பூவுலகைப் பார்த்துநிற்க
தன்னுடைய செயல்கண்ட சிலதேவர்
இவரிடம் சாமி என் பார்பதென்ன
என்னுடைய மாணவன் பெரியதம் பிப்பிள்ளை
இங்குவரு கின்றா னென்ன
அன்னவனை வரவேற்று அமரருள் சேர்த்திட
அனைவரும் காத்துநின்றார்.

மட்டுநகர் தந்தமணி மதியோர்க்குள்ளே
மாமேரு போன்றமணி தமிழாந் தேனை
கொட்டுகின்ற மேகமணி குழந்தையுள்ளம்
கொண்டதொரு அன்புமணி உணர்வுதாழ்வை
வெட்டிவிட்ட வீரமணி பழகுதற்கோ
மேலான பண்புமணி இவை அனைத்தும்
தொட்டுநின்ற புலவர்மணி பெரிய தம்பிப்
பிள்ளையெனுந் திருநாமம் வாழ்க! வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தந்த புலவர்மணி

## மருதூர்க் கொத்தன் (மருதம்)

கன்படு தென்னை கவின்படு நெல்வ யல்கள்
தேன்படு சோலைச் செறிவளமும் - மீன்பாடும்
வாவி குளமும் வளைந்தோடு மூங்கிலாறும்
பூவில் சிறந்த பதி.

வாளை குதிக்க வரிவரால் துள்ளிவிழக்
கோலம்செய் வாவி குளிர்விக்க - வேல்முருகன்
வள்ளிதெய் வானையுடன் வீற்றிருக்கும் மேன்மையதாய்
உள்ளங் கவர்ந்தோங்கும் ஊர்.

மயிலாடு கானும் மலராடு தோப்பும்
ஒயிலாடு மானும் உலாவ - வயலாடு
நெற்கதிர்கள் சாய்ந்து நிலமகளை முத்தமிடும்
பொற்பதிக்கு மண்டூர் பெயர்.

பரந்துபடு மேய்ச்சல் பசுவெருமை மந்தை
நிரைந்துவளம் பூணும் நிலமாய் - சிறந்தழகு
சிந்தப் படுவானின் சீர்தலமாய் ஓங்குபுகழ்
வாய்ந்தோங்கு தில்லைவளர் மண்டூர்.

திருச்செந் தூர்ப்புராணத் தெய்வீகப் பாவமுதப்
பாரா யணத்தால் பயன்காணும் - ஆராமை
மிக்கூரும் மக்களை மேதினியில் கண்டபுகழ்
மக்கூரும் மண்டூரிம் மன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டூராம் நற்பதியில் மேன்மைகொள் நற்குடியில்
வண்ணக்கர் சோமநாதர் மைந்தனே - என்னும்
திருவார்ந்த ஏகாம் பரப்பிள்ளை தந்தை
அருமை மகனென் றறி.

பத்தாவுக் கேற்ற பதிவிரதைத் வண்ணக்கர்
சித்தம் இனிய சிதம்பரப் பிள்ளையவர்
அன்பில் கலந்த அழகுசின்னத் தங்கத்தை
அன்னையாய்ப் பெற்றான் அவன்.

இரட்டை ஆசிரிய விருத்தம்

பிடியோடு களிறாடப் பிணையோடு கலையோடிப்
பிணைந்தாடு காத லாடப்
பறந்தோடு செம்மஞ்சள் பூவாடு கான்சேவல்
பெடையோடு சரச மாடப்
படையோடு வெண்நாரை பவளக்கால் சிறுகீச்சான்
பயிலினிய கலவி யாட
பசுமேனிக் கிள்ளை களும் பண்ணிய நாகணவாய்ப்
பாட்டமும் மைய லாடப்
கொடியாடு பொன்னாகக் குலையாடு பொற்கொன்றைக்
கலையாடு காவு மான்
கனியாடு மண்டூரின் காளைஏ காம்பரப்
பிள்ளைமயல் தானு மாடிப்
பிடியிடைப் பொன்முல்லைப் பூசின்னத் தங்கமகள்
பொற்புடன் புலவி யாடிப்
பெருகதிர் மதியமெனப் பேரெழிற் பெரியதம்பி
பிள்ளையமு தீன்றார் பூவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டூராம் மண்டூரின் வெஸ்லிமிஷன் பள்ளியிலே
கண்டாக ஆரம்பக் கல்வியினை - நன்றாகக்
கற்றபின் ஆங்கிலத்தில் கல்முனையில் கற்கமனம்
பெற்றிருந்தும் கூடாதே போயிற்று.

கனக இரத்தினம் நற்தம்பாப் பிள்ளை
கனியாத சிற்றிளமைக் காலத்தே - இனிதாக
ஊட்டிய ஆரம்பக் கல்விக்கு நன்றியினைச்
சாற்றினான் சால்புதனைச் சாற்று.

புலோலியூர் சந்திர சேகரப் பேர்கொள்
பொலியுதமிழ் ஆனதோர் சான்றோன் - நலந்தர
வந்தார் தமிழை மகிழ்வுடன் மண்டூரில்
தந்தார் மகிழ்ந்தார் தான்.

சூடா மனியும் திருச்செந்தூர்ப் பேர்புராணம்
பாடமும் பாரதப் பாக்கியமும் - கூடியதால்
தன்வீட்டுக் கூடத்துத் திண்ணையமர் பள்ளியிலே
உன்னிப் படிந்தார் உவந்து.

சொல்வார்த்தை சித்தித் திறனுடைய தந்தையார்
செல்லமாய்ச் சொன்ன சிறுவார்த்தை - வல்வினையாய்
வந்தேற அன்னை வரித்தாள் சிவபதந்தான்
சிந்தை குலைந்தார் செகம்.

சிந்தை குலைந்து செயலற்றுக் குடும்பம்
நொந்து நிலைமறந்து நின்றதால் - வந்தமிர்த
சந்திர சேகர வாத்தியார் பாடமதும்
அந்தரத்தில் நின்றொழிந்த தாங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிலே தமிழ்க்கல்வி உற்றிடையில் நின்றொழிய
பேரினிய ஆங்கிலம் கல்முனையில் - சீர்பெருக
பெற்றுயர்ந்த வேளையிலே பொல்லாங்காய் வந்தநோய்
பற்றித் தடுத்ததே பார்.

வர்த்தக நோக்கமாய் வந்து கலந்திருந்த
சீர்மனத்தான் தம்பிமுத்துப் பிள்ளையெனப் - பேரினியன்
மட்டுவில் வாழ்மகா லிங்க சிவத்திடம்
இட்டனன் வாழ்வு இனிக்க

நாவலர் சைவப் பிரகார வித்தியா
காவியப் பாடக் கழகத்தில் - ஆவலுடன்
காவியமும் சிற்றேடும் கண்ணாம் இலக்கணமும்
மேவிப் படித்திட்டார் மேல்.

ஆரா அமுதம் அழகு தமிழினிய
சீரான் குமார சுவாமியெனப் - பேரினிய
வல்ல புலவர் மடியில் தவழ்ந்துதமிழ்
வல்லாண்மை கண்டுயர்ந்தார் வாழ்வில்.

பண்டிதன் செந்தமிழின் பாவலன் விஞ்ஞானக்
கண்டின் சுவை கண்ட கல்விமான் - எண்டிசையும்
போற்றும் மயில்வா கனனாரின் பார்வை நலம்
ஏற்றார் நிறைந்தார் உளம்.

காவியப் பாடசா லையிலே கற்கையிலே
பாவிகமாய் நட்புப் பலிதமாகி - பூவில்
கணபதிப் பிள்ளையுடன் அன்பை இறுதிவரை
பேணினான் பேர்தன்னைப் பேசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகர் சுவாமிகளின் உள்ளத்தில் பள்ளிகொளும்
போகம் அடையும் பெருமையதும் - யாகம்
புரிந்தோர்கள் தாமும் பெறமுடியாப் பேறு
வரித்தார் அடைந்தார் வளம்.

சங்கத்தா னைஇந்துக் கல்லூரி யில்தமிழ்
பொங்கும் மனமாய்ப் புகட்டுகையில் - இங்கிதம்
இல்லாதார் சாதி இழுக்கத்தை ஒப்பாது
தொல்லைகள் ஏற்றார் துணிந்து.

யாழ்ப்பாண மண்ணில் புரையோடிப் போயிருந்த
பாழான சாதிப் பரவணியை - ஆழ்ந்துமனம்
போராடித் தோற்றப் பிரிவோதா யேசுவழி
சீரேற்றார் உள்ளம் திளைத்து.

தென்னாட்டில் வேதத்தை ஓதத் பசுமலை
என்னூரில் உள்ளதாம் கல்லூரி - சென்றடைந்த
ஈராண்டுக் கற்கை இயன்றங் கிருக்கையிலும்
போராட்டம் வந்ததப் போது.

அன்புவழி ஓதும் இயேசு மதத்தாரும்
துன்பமாம் சாதிமுறைத் தீட்டுக்கும் - அன்பராய்
உள்ளதும் மேலை இசையில் தமிழ்ப்பாடல்
சொல்லலும் எதிர்த்தார் துணிந்து.

சுதந்திரத் தாகச் சுடர்பொங்கும் வேளை
அதிசேவை செய்த மிஷனரிகள் ஏகாதி
பத்தியத்தின் சார்பில் பரிவுமிகக் கொண்டதனால்
உத்தமர் நொந்தார் உளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரேசன் செட்டியார் என்று தமிழகத்து
மேதைகள் நட்பும் மிகவாய்ந்து - மேதகமை
தானும் அடைந்து தமிழ்நாட்டில் நந்தமிழாம்
தேனைச் சொரிந்தார் தினம்

கண்டார் மதுரையில் காணரிய தேனமுதக்
கண்டாம் விபுலாநந் தக்காந்த சக்தியினை
வேண்டாமே அந்நியம தான வழியென்று
பூண்டார்நற் சைவநெறி பூரித்து.

திருமலையில் மட்டுத் திருநகரில் உள்ளப்
பரிவுடன் ஆசிரியப் பணியில் - சிறந்தார்
வளர்த்தார் தமிழை; ஒழுக்கத்தைக் கற்றார்
எழுப்பம் அடைந்தார் இகம்.

மும்மணிக் கோவையெழில் மண்டூர் முருகனுக்கு
எம்மா அழகாய் அளித்திட்டார் - செம்மையுற
மண்டூர்ப் பதிகம் மனக்கினிய செந்தமிழில்
கண்டூரத் தந்தார் கலை.

கண்ணனின் கீதை கனிந்தோடு நல்லமுதை
உண்ண முடிந்த அளவுக்கு - உண்டுயர்ந்து
உள்ளம் உணர்வு உயிருனில் தேக்கியருள்
வெள்ளத்தில் தோய்ந்தகவி வேந்து.

கீதை அருள்வாக்குக் கோவையினைத் தேனினிய
சீதத் தமிழில் சிறைப்பிடித்து - வேதத்தில்
நாதத்தை நற்பொருளை நான்கடியாம் வெண்பாவில்
ஓதிக் கொடுத்தான் உலகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் வித்தக மேன்மை விபுலாநந்தச்
சத்தியப் பாற்கடலில் தோய்ந்தெழுந்து - வித்தாண்மை
தானாகித் தமிழைத் தமிழினிய பாவகையைத்
தேனாகத் தந்தானைத் துதி!

சுன்னாகம் தந்தசீர் செந்தமிழின் பேர்புலவன்
அண்ணல் குமார சுவாமியது - பண்ணையிலே
வார்ப்படம் ஆனானை; வண்ணமெனப் பாசெய்து
பேர்ப்பட நின்றானைப் பேசு!

குருக்கள் மடத்துக் குலவுதமிழ்க் கோதைநற்
பேரினிய நல்லம்மா பேரழகை - ஆர
மணவினை செய்து மகிழ்ந்துநன் மக்கள்
குணங்களைப் பெற்றளித்த கோ!

கற்பதற் கென்றமைந்த கல்வியெலாம் கற்றாலும்
'செற்றிபிகேற்' என்றெதும் கைவ சத்தில் - உற்றேறும்
வாய்ப்புக்கள் கால வசத்தால் இடைந்தாலும்
மாய்த்தெல்லாம் வென்றாரிம் மண்.

திருமலை மக்கள் காந்தி மகானை
ஒருமனதாய் ஒன்றிமகிழ் வுற்று - வரவேற்பு
தந்த அமையம் தகுமொரு வாழ்த்துமடல்
தந்த மகானைத் துதி.

புலவர்க்கு வெண்பாப் புலியென்று சொன்னார்
புலவர் மணிபெரிய தம்பி - உலகில்
வருவார் வளம்மிக்க வெண்பாவால் வேதம்
தருவாரென் றெண்ணாத தால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தந்த புலவர்மணி

**- எம்.பி. சிராஜ்மன் (ஊடாடி) -**

கன்னலெனக் கவிகொடுத்த கவிக்கோ கம்பன்,
காலமெலாம் வாழ்ந்திருக்கும் சிலம்பைத் தந்து
எண்ணரிய புகழ்படைத்த இளங்கோ; நீதி
எடுத்துரைக்கும் குறள்அளித்த செந்நாப் போதார்
பின்னர் ஒரு பாரதியும் படைத்தும் அந்தப்
பெருமையெலாம் போதாமல் தனது நாமம்
பொன்னெழுத்தாற் பொறித்திடவே ஒருத்த ரான
புலவர்மணி தன்னை எங்கள் தமிழ்த்தாய் தந்தாள்.

தனையளித்த தமிழுக்காய்த் தனையே தந்த
தலைமகனார் புலவர்மணி கணமும் அன்னை
தனைமறந்து வாழவில்லை, அவரின் வாழ்க்கைச்
சரித்திரமே தமிழ்மொழியின் சரித மாகும்
தனைமறந்து வாழ்ந்திருப்பார் ஆனால் எங்கள்
தமிழ்மறவார் தமிழ்மொழியின் உயர்வுக்காகத்
தனையிழக்கத் துணிந்திடுவார் அவரின் இந்த
தன்மையவர் உடன்பிறந்த தகைமை யாகும்.

இலக்கணமே கண்ணாக இருந்தே பாக்கள்
இயற்றிடுவர் புலவர்பலர் ஆனால் அன்னார்
தலைக்கனம்தான் அவர்கவியில் மீறி நிற்கும்
தண்மைமிகு கவிச்சுவையே கிடைக்கா(து) ஆனால்
இலக்கணத்தைப் பிசகாது பற்றி னாலும்
இனிமையது குறையாமற் கவிகள் யாத்து
மலைக்கவைக்கும் திறன்புலவர் மணிக்கே கையில்
வந்தகலை என்றுகவி உலகம் போற்றும்.
கண்ணனவன் கீதைக்கு உரை நூறுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையிலும் சிலரதனை வடித்த துண்டு
இன்னல்வரும் போதினிலே எம்மைத் தேற்றி
இலகுவிலே மனத்தினிலே பதித்துக் கொள்ள
உண்மையிலே புலவர்மணி கீதை வெண்பா
ஒரு பெரிய பேறாகும் எமக்கு; கண்ணன்
சொன்னமொழி தமிழ்தானோ எனஇப் பாவைச்
சுவைப்பவர்கள் சொக்கிநின்று சுகம்காண் கின்றார்.

இராமர்கதை பக்தியுடன் எடுத்தே ஓதும்
இடத்திலெலாம் மாருதியும் வந்தே நின்று
கரமதனைத் தலைகூப்பிக் கண்ணீர் மல்கக்
கதைகேட்ப தாய்ப்பெரியோர் உரைப்ப துண்டு
அரிய எங்கள் புலவர்மணி இன்(று) இருந்து
அழகுதமிழ்க் கம்பர்கவி நயத்தைக் கூறின்
ஒருமனதாய்க் கம்பனங்கு வந் திருந்து
உருகியவர் நயவுரையில் தனை மறப்பான்.

பண்டிதர்கள் என்றிங்கே பட்டம் பெற்றோர்
பலருண்டு நாமறிவோம் இருந்த போதும்
பண்டிதரென் றேநாமம் பகரும் போது
பாவரசர் இவர்நினைவே மனதில் தோன்றும்
பண்டிதர்கள் மட்டுமிலைத் தமிழைக் கற்ற
பாமரரும் புலவர்மணி கவி சுவைப்பார்
பண்டிதர்க்கும் பண்டிதராய் வாழும் இந்தப்
பாவலரின் பெருமைசொல முடியு மாமோ

கல்வியிலே கரைகண்ட அறிஞர் பல்லோர்
கவிமழையில் நனைவதற்காய் வந்து சேர்வர்
பல்லாண்டாய்த் தாங்கள் கற்றும் தெளியா ஐயம்
பண்டிதரின் விளக்கத்தால் தெளிந்த தென்பர்.
தொல்லைஎன நாம்நினைத்த இலக் கணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவையுடனே இலகுவிலே விளக்க மாகும்
இல்லைஇவர்க் கெவரும்இணை என்றே எண்ணி
இவர்பெருமை சொல்லிநின்று மகிழ்ந்து போவோம்.

வெள்ளையுடைய அன்னவரின் எழிலைக் கூட்டும்
விரிந்த தமிழ்ப் புலவர்அவர் அறிவைக் காட்டும்
கள்ளமிலாச் சிரிப்புநெஞ்சின் குணத்தைக் காட்டும்
காண்பவர்கள் மனத்தினிலே மலர்ச்சி ஏற்றும்
முல்லைமணம் பரவுதல்போல் அவரின் பாக்கள்
முழுதாக உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளும்,
எல்லையற்ற பெருமைதரும் இவரைத் தந்த
எங்கள்தமிழ்த் தாய்க்(கு)இதயம் நன்றி சொல்லும்.

ஏற்றுவதைக் கேட்டுமிவர் மகிழ்வ தில்லை
இகழ்வதனை அறிந்தாலும் கவல்வ தில்லை
போற்றுபவர் தனைப்பார்த்து ஐயா சொல்வார்
"புகழ்எதுவும் எனக்கில்லைத் தமிழுக் கேதான்
ஆற்றலினை அடைந்திடுவீர் தமிழைக் கற்று
அறிவினிலே கரைகாண்பீர் அதனுள் மூழ்கி
போற்றலையும் தூற்றலையும் சமமாய்க் காண
புகட்டிவிடும் எங்கள்தமிழ் அறிவீர்" என்பார்.

சங்கமதைக் கூட்டிஅன்று புலவ ரெல்லாம்
தமிழ்வளர்த்தார் தமக்குள்ளும் சண்டை இட்டார்
பொங்குதமிழ் வளர்ந்ததுவும் உண்மை, ஆனால்
போட்டியிட்டுப் புலவர்மணி தனியாய் நின்று
இங்கெமது புலவர்மணி தனியாய் நின்று
இனிமைதரும் தமிழ் வளர்த்தார் பொறாமை நெஞ்சம்
எங்களுக்குப் பெருமைதரா என்றே சொல்லி
ஏற்றமிகு தமிழ்புலமை உயரச்செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுமையது உடலினிலே படர்ந்த போதும்
முத்தமிழே அன்னாரின் மூச்சா யிற்று
எதுகையது மோனையுடன் இசைதல் போல
எண்ணமெலாம் இலக்கியத்தில் இணைந் தாயிற்று
கதியிழந்து தமிழ்க்கவிதை தவிக்கும் என்ற
கருத்துரைத்துத் தமிழறிஞர் கவலை கொள்ள
எதுவரினும் தமிழினிது சிறந்து வாழும்
என்றஅவர் மொழி எமக்கு மருந்தா யிற்று.

புலவர்மணி பேசுகிறார் என அறிந்தால்
புளகமுடன் திரண்டுவரும் ரசிகர் கூட்டம்
நிலவொளிபோல் புதியசுகம் நெஞ்சில் காணும்
நெக்குருகி நின்றதிலே மூழ்கச் செய்யும்
விலகிவிடும் கவலையெலாம், விளக்கில் வீழும்
விட்டிலைப்போல் அறியாமை வீழ்ந்து மாயும்
இலகுதமிழ் அழகுதரும் இனிய சொற்கள்
இதயத்தில் நீங்காது நிலைத்து நிற்கும்.

"இலங்கைமணித் திருநாடு எங்கள் நாடே"
என்றஒரு கவிதையிலே இந்த நாட்டின்
துளங்குகின்ற வளத்தைஎல்லாம் சுட்டிக் காட்டி
சொற்சுவையால் எழிலூட்டி விளக்கம் செய்தார்.
விலங்குமனம் விட்டுஅறி(வு) ஆண்மை யோடு
மேதினியில் எம்தேசம் உயர்க என்றார்.
இலங்குகின்ற மூவினத்து மக்க ளுக்கும்
எம்நாடு சொந்தமென எடுத்துச் சொன்னார்.

முற்றுமுணர் மெய்ஞ்ஞானி விபுலா நந்த
முனிவரின்மேல் பெரும்பக்தி கொண்டார் ஐயா
எட்டான திசையுமவர் நாமம் ஓங்கி
இருந்திடவே தமிழுக்குப் பெருமை என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமுடன் தமிழ்தாயின் வடிவம் அந்தத்
திருவுடையார் என்றுரைத்துப் போற்றி நின்றார்
பற்றுவிட்ட ஞானியரைப் போற்றும் பாங்கு
பண்புடையோர் தமக்கன்றி மற்றோர்க் இல்லை.

எங்களது தமிழ்மொழிமேல் உயர்ந்த பற்றோ(டு)
இருந்தாலும் பிறமொழியை வெறுத்தார் இல்லை
சிங்களமும் செந்தமிழும் ஒன்றாய் இங்கே
சேர்ந்திருந்து ஆட்சிமொழி ஆனால் நன்மை
தங்குமென உரைத்திட்டார் அன்றே ஞானம்
தந்த உயர் உணர்வாலே; பேருக் கன்றி
இங்கிதனை தொடர்புடையோர் கடைப் பிடித்தால்
எத்தனையோ பிரச்சினைகள் இல்லா தோடும்.
கண்ணெனவே செந்தமிழைக் காத்து நின்ற
காவலராய்த் தமிழறிஞர் இவரைப் போற்ற
முன்னர்இங்கு புகழ்படைத்த புலவர் எல்லாம்
முடிசாய்க்கத் , தமிழ்தாயின் நெஞ்சம் விம்ம,
பொன்னெழுத்தால் அன்னவளின் உயர்ந்த பெற்றி
பொறிந்திட்டார் தமிழ்பெருமை இமயம் வைத்தார்.
மண்ணுலகை விடுத்தாலும் மறைந் திடாமல்
வாழ்கின்றார் வாழ்ந்திருப்பார் மரணம் வென்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தந்த புலவர்மணி

- எம்.பி. சிராஜ்மூன் (ஊடாடி) -

கல்வெட்டுக் கவிதைகளை
கடல் போல தந்தான்
தொல்பொருள் காப்பியத்தை
துல்கிடவே செய்தான்!
உள்வீட்டு இலக்கியங்கள்
உலகறியச் செய்தான்!
ஒரு நூறு ஆண்டெனினும்
ஒளிமயமாய் வாழ்வான்!

அள்ளக் குறையாத
ஆழியது! ஆழச் சென்றால்
தெள்ளு தமிழ்ப் புலமை
தெரியும் வெண்பா மணிகள்
அள்ளும் நெஞ்சை யெல்லாம்
அடடா! புதுமை காண்பாய்
உள்ளீ டெல்லாம் ஞானம்
ஓங்கார கீதை வெள்ளம்!

கிழக்கின் மணி மகுடம்
கிரீடம் சுமந்த வள்ளல்,
அழைக்கும் "யாழ்நூல்" தந்த
அறிஞன் விபுலா னந்த
விளக்கில் படித்த மேதை
விலாசம் ஒன்றே போதும்!
நிலைக்க! நீடு வாழ்வாய்
நின்பணி பாடப் போதா!
கீதையின் சாற்றை யெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்ந்தெழு வெண்பாத் தேனில்
ஓதப் புகுந்த தொன் றே
ஒரு சவால்! "கரும யோகம்"
மேதா விலாசங் காட்டி
மேன்மைக்கு "பக்தியோகம்"
ஓதி, "ஞான யோகம்"
உணர்ந்திட வைத்தாய் வாழி!

முப்பெரும் யோகம் பற்றி
மூலநூல் கீதை சொல்லும்
நற்பெரும் வேதச் சாற்றை
நறுக்கென எளிமை யூடே
அற்புதத் தமிழில் வார்த்தான்!
ஆஹா... என்னே இனிமை
எப்படிப் புகழ்வேன்? ஈது
இறைவன் நற்கொடை யன்றோ?

பட்டத்தால் சிறப்பார் தாமே
பலபேர்கள்! இல்லை யென்றால்
பாராட்டில் மகிழ்வோர் தாமே
பலநூறு பேர்கள்! அரிதாய்
பட்டங்கள்! தமிழ் படைத்த
சட்டங்கள் புலவர் மணி யின்
தகுதிக்கு உரைகல் லாகும்!

"இலக்கியச் செம்ம" லென்பார்
"இலக்கிய வித்தக" ரென்பார்!
"இலக்கியக் கலாநிதி" யென்பார்
"இலக்கிய ஆசா னென்பார்!
வழக்கினில் பட்ட மென்று
வழியெலாம் கொடுத்த போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றிக்குத் திலகம் போல
நிலைப்பது "புலவர் மணி" யே!
வாழ்க்கை நினைவை யெல்லாம்
வரலாறு ஆக்கிக் காட்டி,
தேக்கி வைத்த ஞானத்
திரவிய மெல்லாங் கூட்டி
"உள்ளதும் நல்லது மாக"
உருவக மாலை மாட்டி
தள்ளா வயதில் கூட
தமிழே தந்தா னடா!

கல்லைச் செதுக்கிச் சிற்பம்
காண்பது போலே தமிழால்
சொல்லைச் செதுக்கிச் செழுமை
சொற்களால் கவிதை வடித்து,
"மண்டூர் பதிகம்", "புலவர்
மணிக் கவிதை" யோடு
கண்டேன் கவிதை வண்ணம்
காதலில் தொலைத் தேனடா!

ஊடுபா வாகி யோடும்
உரைநடை நடனம் நெய்த
ஆடலில் "கலித் தொகைக்கு"
அணிகலன் போன்று ரைகள்
சூடினார்! சுவைத்தோம்! இடையே
சொரிந்த பாம லர்கள்
தேடினால் சரம்போ லாகும்
செந்தமிழ்த் தாய்ம கிழ்வாள்!

பழமைக்கும் புதுமைக் கும்மோர்
பாலத்தைப் போட்டார்! வெண்பாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைக்கும் சான்றாய் வந்து
புலவரில் மணியாய் நின்றார்!
தலைமைக்கும் சான்றாய் வந்து
தமிழாசான் பதவி வென்று,
கிழமைக்குள் ஞாயி றாகி
கிழக்கை வெளிக்கச் செய்தார்!
பெரிய தம்பிப் பிள்ளை
பெருஞ் சொத்து தமிழ் மொழிக்கு!
அரிய மலராற் செய்த
ஆரங்கள் தந்த வள்ளல்!
சிறிய வித்தில் வந்து
செழித்த விருட்சம் போல,
அழியாப் புகழ்பெற் றோங்கி
அவர்நாமம் நீடு வாழும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் மணி (ஏ. பெரியதம்பிப்பிள்ளை)

## - கவிஞர் ஞானமணியம் -

பல்லவி

புகழேந்திப் புலவனுக்கு
நிகர் ஆகினார் - எங்கள்
புலவர்மணி - வெண்பாவின்
புகழ் ஏந்தினார். புகழேந்தி

சரணங்கள்

கண்ணன் சொன்ன கீதை வேதம்
கற்று மகிழ்ந்தார் - இந்தக்
காசினியும் பயிலவென்று
கருணை மிகுந்தார்
வண்ணத் தமிழ் வெண்பாவிலே
வாரி மொழிந்தார் - வண்ண
மாலவனின் கீதை நூல்கள்
மானி புரிந்தார். புகழேந்தி

இலங்கைமணித் திருநாட்டின்
ஏற்றம் புகழ்ந்தார் - நாளும்
எங்கள் வளம் பொங்குஞ் செல்வம்
எங்கும் உரைத்தார்
குலங்களொன்று கூடிவாழும்
கோசம் ஒலித்தார் - ஏதுங்
குற்றமிலாச் சைவத்தமிழ்க்
கோலம் அணிந்தார். புகழேந்தி

அண்ணல்விபு லானந்தரின்
ஆசி அடைந்தார் - பேணி
ஆங்கவர்தம் பாதையிலே
அன்பு நிறைந்தார்
எண்ண மெல்லாம் அன்னை தமிழ்
இன்பம் நுகர்ந்தார் - இன்றும்
என்றுமெங்கள் உள்ளத்திலே
ஏந்த லிருந்தார். புகழேந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத புலவர்மணி வாழ்க!

- சி. க. பொன்னம்பலம் -

ஐந்தாம் குரவரெனும் ஆறுமுக நாவலரின்
செந்நாப் புலமைதரும் சீர்க்கா வியசாலை
அந்நாள் வளர்ந்தே நல் அறிவமுத மீட்டியதால்
பொன்னாப் புலவரெனப் பொலிவுபெற்றார் புலவர்மணி

சங்கத் தமிழ்மதுரை சார்ந்த பொழுதாங்கே
பொங்கு மறிவொளியான் புகழ்க்காவி அங்கியினான்
எங்கள் விபுலாநந்த ஏந்தல் தனக் காளாகி
இங்குற் றினியதமிழ் ஆசான் பணிபுரிந்தார்.

கண்டார் களிக்குமருட் கதிர்வேலன் வாழ்தில்லை
மண்டூருக் கேயுரியான் மணவாழ்வு பெற்றதனால்
கொண்டார் புகழுமுயர் குருக்கள்மடத் தேபுகுந்து
பண்பா டினிய மக்கட் பாக்கியமும் பெற்றனரே.

வள்ளுவனைக் கம்பனருள் வளர்காவியச் சுவையைத்
தெள்ளுதமிழ்ச் சிலம்பு செப்புமுயர் செந்நெறியை
அள்ளி அள்ளி ஈந்த அரிய பெரும் பேச்சாளர்
கள்ளமிலா உள்ளக் கவிஞர் தில்கமவர்.

காக்குமருட் கண்ணன் கமல மலர்ப்பாதம்
பாக்குள் இருத்தியதால் பார்முழுதுங் கீதையொளி
தேக்கி யுளம் புதுக்கும் தெய்வக் கவிஞரெனப்
பூக்கும் புகழ் உழைத்த பொன்மணியாம் புலவர்மணி.

தன்பெருமை தான்நாடார் தற்புகழ்ச்சியும் வேண்டார்
இன்முகமும் இன்னுரையும் எல்லவர்க்கு மெப்பொழுதும்
அன்புருக வேகாட்டி அரியகுணக் குன்றானார்
மன்குலத்தின் மாட்சிமைகள் மலர்வதற்கே வாழ்ந்திருந்தார்.

- 08.01.2002 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி புகழ் பாவஞ்சலி

## கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி

1. வெண்பா வில்புக ழேந்தியர் மிஞ்சியர்க்கு
என்பா லாலஞ்ச லியையியம்ப - அன்பால்
பண்புமிக்க புலவர் மணியான பண்டிதரின்
தென்பு தந்தையே தேர்.

2. "தமிழ் தந்த புலவர் மணி" யென்ற தனிநூலால்
அமிழ்தின் இனிய அருந்தமிழே - தமியேன்
தனக்கும் துணைநிற்கும் தமிழாகக் கண்டேன்
எனக்கும் வெண்பாவே இனிது.

3. "இலங்கை மணித்திரு நாடெங்கள்" என்றார்
நலங்கள் பலவற்றை நாடியே - அலங்காரம்
மட்டுமே பெரிதென்று மாகவி யானோர்க்கும்
கட்டுரையாய் தந்தாரெம் கவியே

4. எட்டினமட் டும்பாயும் ஏவுகணை என்றாலும்
மட்டிலாத்தூ ரம்பாயும் மாசக்தி - பட்டுருவி
பாயும் எழுதுகோல் என்றார்நம் பண்டிதரே
ஆயும் பொருளையே அறி

5. நீடுபுக ழுக்குரியோன் நினைவுப் பணிமன்றம்
கூடும் நடைமுறையில் குன்றாது - தேடுதலில்
நாடும் மதிக்கின்ற நம்பெரிய தம்பியர்க்கு
பாடும் அஞ்சலியே பாரீர்.

6. ஆண்டாண்டு தோறும் அறிஞராம் புலவரையே
மீண்டும் நினைவூட்டி வேண்டத் - தூண்டும்
மாண்புடைய செந்தமிழாய் மட்டுநகர் புகழ்சேவை
காண்போம் புரிந்தாரைக் கனிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. என்றென்றும் செந்தமிழின் இனிமை தனைக்கூறி
அன்றன்று வாய்ப்பேச்சால் அவ்வளவே - நின்று
வளரும் சமூகத்தில் வாழ்ந்து வருவோர்க்கு
புலவர் இளச் சேவையே புகழ்.

8. பகவத் கீதையில் பற்றாகி வெண்பாவால்
திகழ்திடவே செய்திட்டதீரன் - புகழ்ந்திடவே
புகழதிலே நாட்டமிலாப் பொற்புடைய பிள்ளையை
நிகழும் காலம் யார் நிகர்.

9. மண்டூரில் பிறந்தே தன்மதியால் உயர்ந்தே கற்
கண்டான பேச்சுடைய கலைவல்லோன் - தொண்டன்
மாவித்து வான்பட்டம் வாங்க நிலையிருந்தும்
தாவித் திரியாத தலை.

10. புலவர் மணியோனின் புலமைகள் தானறிந்து
நலமுணர்ந்த அரசாங்கம் நாடறிய - இலங்கையில்
தேசிய வீரருடன் சேர்த்து முத்திரையால்
பேசும் புகழதனைப் பேசு.

- 08.01.2002 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில எண்ணங்கள்

**- கவிஞர் சாந்தி முகைதீன் -**

1. அன்னைத் தமிழணங்கின்
சின்னக்குழந்தைகளில்
என்னைக் கவர்ந்த தமிழ்ப் பிள்ளை- காட்சிக்
கெளியோன் பெரியதம்பிப்பிள்ளை

2. தென்னை கமுகு பலா
செந்நெல் விளையுநகர்
தன்னில் உதித்த தமிழ்ப்பிள்ளை - இத்
தரணிக்குயர்வு தரும் பிள்ளை

3. ஏகாம்பரப்பிள்ளை
வண்ணக்கர் புதல்வரென
சீராயுதித்த தமிழ்ப் பிள்ளை - பலர்
சிந்தை கவர்ந்த கலைக்கொல்லை

4. சங்கமமைத்த தமிழ்
அங்கமெனத் துளிர்த்த
தங்கமெமதுதமிழ் கிள்ளை - சின்னத்
தங்கம் பிரசவித்த பிள்ளை

5. தொண்டுயர மற்றையவர்
துணைக் குதவியீயுநகர்
மண்டூரெமக்களித்த முல்லை - என்றும்
மாறா மணங்கமழும் கொல்லை

6. நல்லதமிழ்ப் பேச்சாளன்
நாடறிந்த எழுத்தாளன்
வெல்லநிக ராய்வாளன் - பெரிய
வித்தகனே பெரியதம்பிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஆசிரியமெனும் பதத்தை
நேசித்த மூதறிஞர்
ஆசான் புலவர்மணி யாவார் - அதன்
அர்த்தமறிந்தவரே தேர்வார்

8. போதகராய் ஆசிரியப்
போதகராய்க் கவிஞர்களின்
போதகராய் புலவர்மணி வாழ்ந்தார் - அறப்
போதகராய் நம்மவர்கள் மீண்டார்

9. ஆசானாய் புலவர்மணி
அமர்ந்த விடமறிந்தவர்கள்
கூசாமலோடி நடைகொண்டார் - அவர்
கூடாரத்தே யிணைந்து கொண்டார்

10. வெண்பாவில் புகழேந்தி
விரிவுரைக்கு கி. வா.ஜ.
உண்டோர்க்கு உ.வே.சா. - தமிழுக்
குரித்தாளர் புலவர்மணிஐயா

11. இதயத்தில் ஈரிதழாய்
இஸ்லாமியரும் தமிழர்களும்
உருவத்திலொன்றென்று யாத்த - புலவர்
உயிர்வெண்பா ஈழத்தில் வாழும்

12. கலையுலகில் நம்மவர்க்கு
கைகாட்டி புலவர்மணி
இலையுலகில் இவர்போல என்று - மக்கள்
எண்ணுகிறார் அவர் புகழை இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நடமாடும் திருக்கோயில் ஐயா
நாம்பார்த்த அகத்தியரே மெய்யா
இடம் பார்த்து தமிழினிமை கூறும் - அதன்
இதம் நெஞ்சில் என்றென்றும் வாழும்

14. உள்ளத்தைக் காட்டுமுடை வெள்ளை
ஒய்யார நடையழகோ கொள்ளை
அள்ளத்தான்குறையாத பிள்ளை - தமிழ்
அறிவுக்கு பெரியதம்பிப்பிள்ளை

15. முத்தமிழை ஆய்ந்தறிந்த புலவர்
மும்முறையும் தேர்ந்த மணிப்பெரிய
வித்தகராம் குறுமுனியின் தம்பி - சுவாமி
விபுலானந்தருயர் பிள்ளை

16. தமிழ் தந்த புலவர்மணிப்பிள்ளை
தமிழத்தந்தை புலவர்மணிப்பிள்ளை
தமிழாள்வார் புலவர்மணிப் பிள்ளை - தீந்
தமிழானார் புலவர்மணிப் பிள்ளை

17. தமிழாய்ந்த புலவர்மணி வாழ்வார்
தகைசார்ந்த பெருமையுடன் வாழ்வார்
தமிழாகித் தமிழ்காத்த புலவர் - உலகில்
தமிழ்வாழுமட்டும்மவர் வாழ்வார்

இலக்கிய கலாநிதி புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களின்
23வது நினைவுதினம் (08.01.2002)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி ஒரு பா ஒரு பஃது

## கலாபூஷணம் SARM செய்யது ஹஸன் மௌலானா -

1. சங்கத் தமிழ்க் கவிதைச் சாகரத்தில் பேராறாய்ச்
சங்கமித்த ஐயா தரணியிலே - கங்கையைப்போல்
காவிரிபோல் சான்றோர் கவிளத்தால் வாழ்வளிக்கும்
பாவிகமா முன்றனுயர் பாட்டு.

2. இலங்கைவளம் பாட்டு இதயநெடும் வானக்
கலையரங்கில் நர்த்தனஞ்செய் காட்சி - இலக்கியப் பூஞ்
சோலையிலே பூத்தவொரு சுந்தரப்பூ வண்ணமுன்றன்
மாலையிலே வாடா மலர்.

3. கிழக்கிலங்கை மக்கள்தம் கீர்த்திசொல்வெண்பா
அழகியற்கைக் காட்சிகளின் ஆரம் - பழகுதமிழ்ச்
சொல்லாட்சி உள்ளழகு தூண்டுமின்பக் கற்பனைகள்
எல்லார்க்கும் நெஞ்சையள்ளுமே.

4. நீதிநூற் கொள்கையினால் நேர்வழிகாண் மக்களெலாம்
தீதின்றி வாழ்கின்றார் செந்நெறியில் - ஓதக்கேள்
நற்பகவத் கீதைவெண்பா நாவினிக்கப்பாடியதால்
கற்கமனப் பாடமாங் காண்.

5. திருமால் அவதாரம் செங்கமலக் கண்ணன்
பெருமைசேர் காவியத்ததைப் பேசும் - ஐயாபோல்
கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ்வளர்த்து
செம்மனச்சொற் சித்திரங்கள் தீட்டு

6. நாற்பொருளின் நூற்பயன்கள் நல்லதமிழ் வெண்பாக்கள்
சாற்றுநெறி கற்பிக்கும் சால்பனைத்தும் - ஏற்படுத்தும்
பேதமிலா உள்ளுணர்வால் பாரதப்போர் பேசுமுயர்
கீதைநெறித் தத்துவத்தைக் கேள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இந்துமுஸ்லிம் மக்கள் இதயத்தின் ஈரிதழ்போல்
சந்ததமும் வாழுமொரு தாய்மக்கள் - என்றவெண்பா
ஒற்றுமைக்கு தாரணமாம் ஒன்றுபடுஞ் சமூகஞ்
சுற்றமெனக் காணுமவர் சொல்

8. மீன்பாடும் வாவியெழில் வீசுதென்றல் சோலையெழில்
மீன்விழிகாண் பாவையெழில் விஞ்சுகின்ற - தேன்கவியால்
கேட்டுவக்ககப் பாடும் புலவர் மணிக்கென்றும்
கூட்டுங் கவியரங்கங் காண்

9. சீர்விபுலாநந்தர் சிறந்த நட்பின் பேறாய்நற்
பேர்சொல்லும் உன்வாழ்க்கை பீடுறவே - ஆர்வமித
பாட்டும் உரைவளமும் பைந்தமிழர் நற்பணியும்
நாட்டமுடன் செய்தீர் நயந்து

10. சங்கத் தமிழ்ப்பலகை சான்றோர் அவைக்காட்சி
மங்காப் புகழ்சேர்க்கும் வாக்கமுதம் - தங்கியொளிர்
எங்கள் கலைவிளக்கம் ஏபெரிய தம்பிவழி
அங்குபணி செய்வோம் இயம்பு.

- 08.01.2002 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் ஐயா உன் பாதம் போற்றி

ஆ. மு. சி. வேலழகன்

உலகினர் போற்றும் வேத
உணர்விலே தோய்ந்து நாளும்
பழுதிலாத் தழிலை ஆய்ந்து
பாவெனக் கோர்த்து ஞானப்
புலவனாய் மிளிர்ந்து பல்லோர்
புகழ்ந்திட நிலைத்தே நிற்கும்
அழகினில் ஜோதியானாய்
ஐயா உன் பாதம் போற்றி

எழுதிடக்கல் தான் மாறா
ஏற்றது நீரேயல்ல
உழுதிட வளங்கள் தேங்கும்
உன் நிலை இஃதே மக்கள்
தொழுதிட சிலையே யானாய்
தோன்றிடின் உன் போல்ச் சான்றோர்
பழுதுறு உலகை மாற்றப்
பண்பினர் தோன்ற வேண்டும்!

வேறு

இயங்கியலின் சித்தாந்த அடிப்படையில் - உல
கிருப்பதில் லைப்பிறந்தெழுந்து அழிவதுண்மை
தயங்கி நின்றுமேன்மேலும் அவற்றினுள்ளும்
தக்க பெரியார்களினால் முயன்றளித்த
இதிகாசபுராணங்கள் இலக்கியங்கள்
இவையாக்கும் மொழிகள் கலை பண்பாடெல்லாம்
அதிசயமாய்ப் பல நூறு ஆண்டுக்காலம்
அழியாது தடங்காட்டி நிமிர்ந்தே நிற்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்து வால்கா கங்கை வரை வாழ்ந்த கோடி - கோடிச்
ஜீவன்கள் மானிடரில் சிலர்தான் மண்ணில்
வந்து வரலாறு சொல்லும் வகையிலெங்கும்
வாழ்ந்தார்கள் வாழ்ந்து மிருக்கிறார்கள்!
அந்த நல்வரிசையிலே கிழக்கிலங்கை
அன்னை மண்டூர் ஈன்றெடுத்த அருமை மைந்தர்
புலவர்மணிப் பெரியதம்பிப்பிள்ளை ஐயா
புகழ் பெயர் அவர்பணியும் நிலைத்ததிங்கே

எத்தனையோ ஐயாக்கள் பெரியரென்ப
ஏதேதோ செய்வ தென விளம்பரமே செய்து
சித்து விளையாட்டு எனும் அரசியலிலோடு
சிவன்தொண்டு சமூகத்தின் தொண்டே என்று
சொத்தினிலே கண்புதைத்து நாகரிகமாக
சுறண்டியே தன் மனைவி மக்களோடு
மட்டமான சுயநல வாதிகளைப் போலே
மக்களினைத் தினமேய்ந்து வாழ்த்திடாமல்

தவத்திரு விபுலானந்தடிகளார்க்கு
தகமையுறு மாணவனாய் இணைந்து மேலும்
உவத்தின்புறும் வகையில்க் கண்டுகேட்டு
உய்த்துணர்ந்து கற்றுவந்த ஆற்றலாலே
கண்ணனது கீதையிலே காதல் கொண்டு
கர்ம, ஞான, பக்தியெனும் யோகம் மூன்றை
பண்ணினிய வெண்பாவில் வடித்தார் அந்தப்
படைப்பினொடு நூல்கள் பல எழுதியே முடித்தார்!

கல்லோயா நீரருவி பேரிலுமே ஐயாகன
காத்திரமாய் உளமீர்க்கக்கானல் வரிபாடி
நல்லறிஞர் பெரியோர்கள் வாழ்த்தி நிதம் போற்ற
நாநயத்தால் மேலுமிவர் நற்பணிகள் செய்தார்!
நல்லார் ஒருவர் உளர் அவர் பொருட்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர்க்கும் பெய்திடும் மாமழையென்பதுபோல்
பொல்லாக் கொடியோர்கள் சூழுலகிலின்று
புலவரையயாபோன்றோரால் நலன் பயக்கும் நின்றே!
ஊர்களில்க் கோயில்களில் ஒற்றுமையிலாது
உயிர் கொல்லும் நோயெனப் பிரிவினைகள் தோன்ற
சீர்செய்யும் வகையிலே ஐயாங்கு சென்று
சிரமமெனக் கருதாது அறிவுரைகள் கூறி
போரெதும் எழாமலே பொறுமை காத்திடுவார்
பொதுமக்கள் அதுகண்டு மனதாலின்புறுவார்
கார் பொழியப் பயிர் மகிழ்ந்து வளர்நிலையதாக
கல்வியுடன் ஒழுக்க நெறிவளர்ந்தன இவராலே!

வேறு

கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பதுபோல்
கடலும் கடல் கடந்த கன்னித் தமிழ் நாட்டின்
கல்கி, கலைமகள் ஆசிரியர்களான - திரு
கிருஷ்ணமூர்த்தி ஐயா கி. வா. ஜெகநாதனென
நல்கி உறவாடி நாடு விட்டு நாடு வந்தும்
தொடர்போடிருந்தார்கள் தொன்மைத்தமிழ்பேராலே!
பல்கிப் பெருகியதோர் பாரறிந்த அறிஞரான
பெரியதம்பி ஐயாவின் பெருமைசொல நாம் தகுமோ!

வேறு

சாதி நெறி இன மொழிப் பிரதேச மென்று
சாராது சகலர்க்கும் உறவினரே போன்று
நீதியது வழுவாத நிறைகுடமாம் ஐயா
நீசரும் தலை தாழ்த்தி ஏகிடவே வென்ற
ஓதி உணர்பண்பாளர் உடைநடைகளாலே
ஓரமது சாராது உலகு உய்யும் இவராலே
ஆதிசிவன் மகனான ஆறுமுகன்மீது
ஆறாதபற்றுடைய ஐயா தாழ்போற்றி
முடிக்கிறேன் நன்றி, வணக்கம்.

- 08.01.2006 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் பூத்த புலவர்மணி

**- கவிஞர். கா. சிவலிங்கம் -**

அருள்மழை பொழிந்து நித்தம்
அடியவர் வினைகள் தீர்க்கும்
முருகவேள் வாழும் மண்டூர்
மனமுவந் தளித்த மேதை

புலவருள் மணியாம் எங்கள்
பெரியதம் பிப்பிள் ளையோர்
திலகமென் றாற்பொய் யில்லை
தரணியே சான்று சொல்லும்.

பெற்றனர் மணியை ஏகாம்
பரப்பிள்ளை சின்னத் தங்கம்
கற்றிட வைத்தார் மெ.மி
கல்முனைப் பள்ளி தன்னில்

தமிழினில் ஆர்வம் ஓங்க
தனையனும் யாழ ரேகி
அமிர்தமாம் தமிழை உண்டு
அரியபண் டிதராய் ஆனார்

காலமுங் கனிந்து வந்த
காரணத் தாலே காளை
சீலமும் வனப்பும் மிக்க
சுந்தரி நல்லம் மாளை

திருமண மாலை சூட்டத்
தோன்றின லிங்கம் நான்கு
தருமமுஞ் சிவமுஞ் சாந்தம்
சத்தியம் நான்கு மோங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சுமி வேண்டு மன்றோ
இல்லத்திற் கென்று ஏங்க
இலட்சிய மீடே றிற்று
சந்தானந் தனமு மோங்க.

(வேறு)

பல்பணிக ளாற் றிடினும்
புலவர்மணிக் கேற்ற பணி
கல்வி அமு தூட்டிடுமோர்
குருப்பணிதான் வேறில்லை

ஆக்கிவைத்தா ராசுகவி
ஆயிரமாங் கவிதைகளை
ஊக்கு வித்தார் கல்வியினில்
உயர்ந்திடவே மாணாக்கர்.

பண்டிதராம் மதுரகவி
பாவேந்தன் கவியரசாம்
உண்மையிலே விருதுகளில்
உயர்புலவர் மணி சிகரம்

பலமணிக ளென்று புகழ்
பட்டங்கள் பெற்றிடினும்
புலவர்மணி என்றதுமே
புரிந்துவிடும் யாரென்று

அதியுயர்ந்த நல்விருதாம்
இலக்கியச் செம்மல் தனை
தகி தவறிப் பெற்றார் தன்
தேகாந்த நிலையினிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீண்டாமை யை யொழிக்கத்
தாளாண்மை கொண்டெழுந்தார்
தூண்டா மணிவிளக்காய்
தானொளிர்ந்தார் தாரணியில்

முனிவர் விபு லானந்தர்
மீட்சிப் பத் தினைச் செய்யுள்
தனிலுமலர் கீதையதைத்
தந்திட்டார் வெண்பாவாய்.

உள்ளதும் நல்லதுடன்
உயர்பாலைக் கலியினுளும்
உள்ளகட் டுரைகளெலாம்
உள்ளத்தைத் தொடுபவை தான்.

மணிபுகழைப் பாடுதற்கு
மணிகள் சில போதாதே
பணிகளிலே புகழ்பூத்த
புலவர்மணி வாழியவே.

மறைந்தவர் பொய்யுடல் தான்
மங்காத புகபூடலோ
மறையாது மறையாது
மண்ணுலக முள்ளவரை.

புலவர்மணி. பெரிய தம்பிப் பிள்ளை
30வது நினைவு தினக் கவிதாஞ்சலி - 02.11.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி புகழ் வாழ்க.

கவிஞர். கலாபூஷணம். கா. சிவலிங்கம்

புலவர்மணி யாரென்று பகர்கின்றேன் கேளுங்கள்.
பெரியபுகழ் மிக்க தொரு புகழேந்தியின் னிளைய
தம்பிதான். அன்னை தமிழ் ஈன்றெடுத்ததோரினிய
பிள்ளை தான் பெரிய தம்பிப் பிள்ளை எனும் பெயருடையோன்.

(வேறு)

ஆறுமுகம், ஈராறு தோளும் - வெற்றி
வேலுமுடை திருமுருகவேளும்
அருள்மழை பொழிந்து
வல்வினை களைந்து
கோயில் கொண்டே யமர்ந்து ஆளும்

மண்டூர் உவந்தளித்த முத்து - அவர்
தமிழ் கூறுந் நல்லுலகின் சொத்து
பூவுலகின் மொழிகள்
பலவிருந்து மவர்க்குச்
செந்தமிழ்மீதான துவே பித்து.

தமிழ்மீது மையல் மிக வுற்றார் - தேன்
தீந்தமிடைக் கசடு அறக்கற்றார்
கவிதை பல யாத்துப்
புகழ் பூத்த செம்மல்
புலவர்மணி என்று பெயர் பெற்றார்.

மாண்புறு நல்லாசானாயிருந்து - நன்கு
ஊட்டினார் தமிழமுத விருந்து
இலட்சியம் மறந்து
அலட்சிய நபர்க்கு
அருத்தினார் அறிவுரை மருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு)

நண்டூரும் வாவியத னோரம் எழுந்தருளி
நீலமயில் மீதமர்ந்து
வண்டூரும் நறைகொண்ட மலர்மாலை யினையே தன்
மார்பினிற் சூடி மகிழும்
மண்டூர் முருகனவன் புகழ் பாடி
அவர்யாத்த
மண்டூர்ப் பதிக மதனைக்
கண்டூர் மகிழ்ந்தேற்றிப் புலவர் மணிக் கிட்டதுவே
கவியரசர் எனுந் நாமமே.

தீண்டாமையினை யொழிக் கத் தாளாண்மை கொண்டு மணி
தாழாது நெஞ்சிலுறுதி
பூண்டார். முனிவர் விபுலானந்தரின் மீட்சிப்
பத்தினைப் பாடியருள
மீண்டார் பிணியிலிருந் தேவிபுலானந்தருமே.
மனையாள் நோய் விலகி ஓட
ஆண்டாளுக் கருளீந்த பரந் தாமன் கீதையினை
ஆக்கினார் வெண்பாவிலே.

உள்ளதும் நல்லதும் மற்றுயர் பாலைக் கலியினையும்
உரைநடையிலுருவாக்கியே
உள்ளமதைத் தொடுகின்ற கட்டுரை களாய்த் தந்து
உலவவிட்டார் தரணியில்
கள்ளமே எள்ளளவும் நெஞ்சிலில் லார் புகழோ
களங்கமே யின்றி உலகம்
உள்ளவரை எஞ்ஞான்றும் நீடித்து நிலை நின்று
ஓங்கியே வாழ்க வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு)

திக்கெட்டும் நற்புகழை நட்ட மணி - நறுந்
தேன் சொட்டும் பாபடைத்து விட்ட மணி - படு
துட்டார் மனங்களையுந் தொட்டமணி - மதி
கெட்டோர்க்குங் கல்வியமு திட்ட மணி - எழில்
நட்டமிடும் நாமகள் கண்பட்ட மணி - வான்
திங்கள் எனைய மனத் தங்க மணி - நிதம்
மங்காப் பெருமையுறு துங்க மணி - தன்
உயிரே செந் தமிழென்ற வயிர மணி - நகை
தவழ முகங் காட்டு மொரு பவள மணி - பெரும்
மண்டூர் தமிழ்க் களித்த குண்டுமணி - இறை
பத்து மிகக் காட்டு மொரு பவளமணி - சிறு
எள்ளளவுங் கள்ளமிலா வெள்ளி மணி - அரும்
பெரியோர் நல்லுள்ளம் பிரியாமணி - தன்
என்புந் தமிழ்க் கென்ற அன்பு மணி - பெயர்
நிலவப் பா யாத்த பெரும் புலவர் மணி - புகழ்
உடல் கொண்டு உலகில் நிதம் வாழ்க! வாழ்க!

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் 34 ஆவது
நினைவு தினக் கவிதாஞ்சலி - 02.11.2012

Class No:
Acc No 1367
Arasady Public Library
Municipal Council
Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1357

Class No:
Acc No 1357
Arasady Public L.
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலைப்பற்றி...

மூத்த தலைமுறை சார்ந்த ஆளுமைகள் மீது பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கவிதைகள் பாடப்படுகின்ற மரபு எம்மிடம் உள்ளது. எனினும் அவற்றைத் தொகுத்து நூலுருவாக்கும் மரபு எம்மிடமில்லை. ஆறுமுக நாவலர் பற்றிய கவிதைகள் அவ்வாறு தொகுக்கப் பட்டு வந்த பின்னர் புலவர்மணி பற்றிய இத் தொகுப்பே வருகின்றது. கிழக்கில் வரும் முதற் தொகுப்பும் இதுவே ஆகின்றது!

இத்தொகுப்பிலே பாராட்டுரைகள் தவிர புலவர்மணியின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கின்ற கவிதைப் பகுதிகளுளுள்ளன. அன்னாரது கவிதை நூல்களின் சிறப்பு முக்கியத்துவம் பற்றி எடுத்துரைப்பனவுமுள்ளன. கவியரங்கத் திறனை வெளிப்படுத்தும் கவிதைகள் உள்ளன. அந்த நிகழ்ச்சிகளின்போது புலவர்மணியின் புலமைத்திறனை வெளிப் படுத்தும் அம்சங்கள் சிலவற்றை எடுத்துக் காட்டும் கவிதைப்பகுதிகளுமுள்ளன.

சமகால கவிஞர்கள் பற்றியும் சமகால கவிதைச் செல்நெறி பற்றியும் அறிவதற்கான வாய்ப்பினையும் இத்தொகுப்பு வழங்கியுள்ளது.

வாழ்த்துக்களுடன்
**கலாநிதி. செ. யோகராசா**
(ஓய்வுநிலைப் பேராசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org